
இந்திரா
சௌந்தர்ராஜன்
ஐந்தாம்
சக்தி

# ஐந்தாம் சக்தி

## (பிராப்த சித்தி)

இந்திரா சௌந்தர்ராஜன்

மின்நூல் ஆக்கம்: தமிழ்நேசன்

# ஐந்தாம் சக்தி

## 1

*வான சாஸ்த்திரத்திலும் ஜோதிடத்திலும் மிகப் பெரிய முன்னோடியாக திகழ்ந்தவர் வராகமிகிரர். விக்கிர மாதித்தன் காலத்தில் அவனது அவையை அலங்கரித்தவர். அன்றே இந்த பூமி உருண்டையானது என்பதிலிருந்து சந்திரன் சுயமாக ஒளிர்வதில்லை, சூரியனால்தான் அது ஒளிர்கிறது என்று உலகுக்கு கூறியவர்.*

*ராசி மண்டலம் பற்றியும் கிரகங்களின் வீச்சு பற்றியும் மிக நுட்பமாக அறிந்தவர். இவரே ஒரு மனிதனின் மன அமைப்பும், அதில் அவன் சிந்திக்கும் முறைகளும் சந்திர சூரியர்களைப் பொறுத்தே அமையும் என்று கூறியவர். இவர்களுடன் புதனும் சுக்கிரனும் சேர்ந்து பலமுடன் செயல்பட்டும், மற்ற ஐந்து கிரகங்கள் (சனி, செவ்வாய், ராகு, கேது, குரு) தங்கள் சுழற்சியில் நற்பலன்களை மட்டுமே தருபவர்களாக இருந்துவிட, அதற்கு ஜாதகரின் பூர்வ புண்ணியமும் துணை செய்யும் நிலையில், அந்த ஜாதகன் இந்த மண்ணையும் மனிதர்களையும் மற்ற யாவற்றையும் படைத்த கடவுளுக்கு இணையான வல்லமையைப் பெறுவான். சுருக்கமாய் சொல்வதானால் அஷ்டமா சித்தும் இவனைத் தேடி தானாய் ஓடிவரும்.*

*ஆனால் காலச் சுழற்சியில் அப்படி ஒரு கிரக சஞ்சார அமைப்பு மிக மிக அபூர்வமானது என்று குறிப்பிட்ட அவர். அப்படி ஒரு கிரக சஞ்சார அமைப்பு எப்பொழுதெல்லாம் வரும் என்று கணக்கிட்டு ஒரு நூலினை எழுதினார்.*

*ஆனால் அதை காலவெள்ளம் கொண்டு சென்றுவிட்டது.*

*ஆயினும் அப்படி ஒரு கால அமைப்பு வராமல் போகவில்லை. அந்த அமைப்பில் மானிடப் பிறப்பும் நிகழாமல் போகவில்லை.*

*அரிதான அவ்வேளையில் பிறந்த மானிடன் துளியும் கர்வத்துடனோ, தனது ஆற்றலை பிறருக்கு காட்டி அவர்களைக் கவரவோ முயலான்.*

*சொல்லப்போனால் அவன் மரணிக்கும் வரையிலும் தனது பேராற்றலை ஒரு ரகசியப் பொக்கிஷமாகவே வைத்திருப்பான்.*

*காரணம். அந்த ஆற்றல்களைவிட பெரியது, அதைக் கொண்டு அமைதியாக ஆர்ப்பாட்டமின்றி வாழ்வதும் அதன் மூலம் ஒரு சிறு சலனத்தைக்கூட உலகில் உருவாக்காமல் இருக்க வேண்டும் என்பதும்தாம்.*

அமெரிக்காவில் இருந்து அண்ணா வரப்போகிறாராம். அதை நினைத்து நினைத்து பரவசத்தில் இருந்தாள் பங்கஜம். கணேசனும் கவனித்துக் கொண்டுதான் இருந்தான். நிலை கொள்ளாமல் வாசலுக்கும் கொல்லைக்குமாய் அவள் நடப்பதும், அவ்வப்போது துடைப்பத்தை தேடி எடுத்து வந்து தேடித்தேடி ஒட்டடை அடிப்பதுமாய் ரகளை செய்து கொண்டிருந்தாள்.

இரண்டு நாள்களாகவே இந்தக் கூத்துதான்.

அண்ணா வந்தால் அவரைத் தரையில் உட்காரச்சொல்லக் கூடாதாம்.

அதற்காக, நாலு வீடு தள்ளி இருக்கும் நடராஜய்யரைப் போய் பார்த்து அவர் வீட்டில் இருந்து இரண்டு பிரம்பு நாற்காலிகளைக் கொண்டு வந்து போட்டிருக்கிறாள்.

அந்த நாற்காலிக்கு அப்பா சுந்தரமூர்த்தியின் பழைய சால்வையைக் கிழித்து உறையும் தைத்துப் போட்டாகி விட்டது.

மொத்தத்தில் வீடே தூசு தும்பு இல்லாமல் பளிச்சென்று இருக்கிறது.

"பாத்து பங்கஜம். சுத்தப்படுத்தறேன்னு நீ தேய்க்கற தேய்ல பெயிண்ட்டெல்லாம் கையோட வந்துடப் போறது." என்று சுந்தரமூர்த்தியும் செல்லமாய் சொல்லிப் பார்த்தார்.

ஆனால் கணேசன் அப்படி எல்லாம் சொல்லவில்லை. அம்மாவை செயல்படவிட்டு ரசித்தான். அவனுக்குத் தெரிந்து இத்தனை வருஷத்தில் அம்மா தரப்பில் இருந்து சொந்தம் என்று சொல்லிக் கொண்டு வரப் போகிற முதல் மனிதரே அவள் அண்ணா ராமச்சந்திரன் தான்.

பங்கஜம் வரையில் இது ஒரு ஆச்சரியமான விஷயம். தங்கை வீட்டுக்கு அண்ணன் வருவது என்பதில் அப்படி என்ன ஆச்சரியம் வந்துவிட முடியும் என்கிற கேள்வி எழலாம். ஆனால் பழைய சமாச்சாரங்களை எல்லாம் கொஞ்சம் அலசினால்தான் அது ஆச்சரியமானதாகத் தெரியும்.

கணேசனின் அப்பா சுந்தரமூர்த்தி ஒரு தமிழ் வாத்தியார்.

அவர் பணியாற்றும் பள்ளிக்கூடம் சொல்லிக் கொள்கிற மாதிரியான ஒரு பள்ளி கிடையாது. அவர் குடும்பமே வாத்தியார் குடும்பம்தான். கணேசனின் தாத்தா வான மாமலை ஒரு கணக்கு வாத்தியார். பெரியப்பா நாகேந்திரன் ஒரு சைன்ஸ் வாத்தியார் கொள்ளுத் தாத்தா நாதமுனியோ சமஸ்க்ருத பண்டிதர்.

இப்படியாக வித்தை மலிந்த குடும்பம் அது. ஆனால் சரஸ்வதி இருக்குமிடத்தில் லட்சுமி இருக்கமாட்டாள் என்கிற சொலவடை சற்று உண்மையானது என்றுதான் கூற வேண்டும்.

ஆகையால், வருவது வயிற்றுக்கும் வாயிக்கும் சரியாக இருந்தது. கொஞ்ச நஞ்ச சேமிப்பும் அத்தைகளை கல்யாணம் பண்ணி அனுப்புவதில் தீர்ந்து போயிற்று.

இந்த நிலையில் சுந்தரமூர்த்திக்கு கல்யாணி என்று ஒரு பெண்ணைப் பார்த்து முடிவும் செய்துவிட்டார்கள். அதுவும் அவசர அவசரமாக. காரணம், சுந்தரமூர்த்தியின் அப்பா வானமாமலைக்கு மரணம் நெருங்குவதாக டாக்டர்கள் நாள் குறித்துவிட்டிருந்ததுதான்.

'ஒரு வாரமோ, பத்து நாளோ தாங்கினால் அதிகம்' என்றனர். ஆகையால் அவசர அவசரமாக சுந்தரமூர்த் திக்கு பெண் பார்த்து கல்யாண தேதியும் நிச்சயித்தனர். கல்யாணத்தைப் பார்த்துவிட்டு கண்ணை மூடுவதற்காகவே பிராணனை இழுத்துப்பிடித்து வைத்திருந்தார்

ஆனால் விபரீதம், வேறு விதத்தில் வந்தது. சுந்தர

மூர்த்திக்கு நிச்சயம் செய்த அந்தப் பெண் கல்யாணி, கல்யாணத்தன்று வேறு ஒருவனுடன் ஓடிவிட்டாள்.

சாதாரணமாக, பெண்ணிருக்க மாப்பிள்ளைதான் இப்படி ஏதாவது செய்வான். பெண்ணின் அப்பா கதறி அழுவார். பார்க்கச் சகிக்காமல் எவனாவது வந்து பெண் கழுத்தில் தாலியைக் கட்டுவான்.

சுந்தரமூர்த்தி சார் விஷயத்தில் தலைகீழாக. பெண் ஓடிப்போக சுந்தரமூர்த்தி நிர்க்கதியாய் நிற்கிற மாதிரி நின்றனர். வானமாமலை ஒருபுறம் தம்பதிகளை வாழ்த்து வதற்காக துளசித் தண்ணீரைக் குடித்தபடியே படுத்துக் கிடக்க, கல்யாண வீடே கலவரப்பட்டுப் போனது.

சுந்தரமூர்த்தியின் சொந்தங்கள் அந்த நிலையிலும், வேறு ஒரு பெண் அகப்படாதா என்று முட்டி மோதிப் பார்த்தனர்.

எல்லோரும் ஒரு தமிழ் வாத்தியாருக்குப் போய் தன் பெண்ணைத் தருவதா என்று தவிர்த்துவிட்டு சைலன்ட்டாக ஒதுங்கிக் கொள்ள, சுந்தரமூர்த்திக்கு அவர்கள் அப்படி அலைவதே! மிகக் கேவலமாக இருந்தது.

கரகரவென்று பட்டு வேட்டியும் துண்டுமாய் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டார்.

"அப்பா. உங்களை திருப்தியா போக விடாதபடி காலம் சதி பண்றது. என் தப்பு ஒண்ணுமில்லப்பா" என்கிற விசும்பல் வேறு.

அப்பொழுதுதான் கல்யாண வீட்டில் இருந்த சுந்தர

மூர்த்தியின் அண்ணா நாகேந்திரனுக்கு ஒரு நல்ல ஐடியா தோன்றியது.

அந்த கல்யாணத்துக்கு ஒரே ஒரு பெண் மட்டும் தனியே வந்திருந்தாள். அவள் உறவினர் யாரும் வந்திருக்கவில்லை. அவளிடம் போய், "அம்மாடி ஒரு அஞ்சு நிமிஷம் மாலை யும் கழுத்துமா வந்து நிக்கறியா? அந்த பிராம்மணன் உயிர் போன நிமிஷம், நீ மாலையைக் கழட்டிட்டு வந்த மாதிரியே திரும்பிப் போயிடலாம். உனக்குக் கோடி புண்ணியம். ஒரு மூத்த உயிரை நல்ல விதமா அனுப்பி வைக்கத்தான் இந்த உதவியையே நான் கேக்கறேன்'' என்று நாகேந்திரன் கெஞ்சி அழ, அந்த பெண்ணும் சம்மதித்தாள். அவளையும் சுந்தர மூர்த்தியையும் ஒன்று சேர்த்து மாலை அணிவித்து ஒரு போலித் தம்பதிகளாக்கி வானமாமலை முன் கொண்டுபோய் நிறுத்தவும், வானமாமலைக்கு புது தெம்பே வந்து விட்டது. உயிர்மூச்சு போய்விடும் என்று நினைத்தவரிடம் உயிர்மூச்சு திரும்பினால் எப்படி இருக்கும்?

நாகேந்திரன் திண்டாடிப் போய்விட்டார்.

வானமாமலையோ அந்தப் பெண்தான் தம் மகனின் மனைவி. தமக்கும் மருமகள் என்று நினைத்து அதுவரை அவர் ரகசியமாக வைத்திருந்த ஒரு தங்கச் சங்கிலியையும் எடுத்துப் போட்டுவிட்டார்.

குரங்கு ஆப்பு அசைத்த கதையாகிவிட்டது. நாகேந்திர னுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. சுந்தர மூர்த்தியும், "மேடம் தப்பு நடந்துடுத்து. உங்களை வெச்சு

இப்படி ஒரு பரிட்சையை நாங்க எழுதியிருக்கக் கூடாது. நீங்க கிளம்புங்க நடக்கறது நடக்கட்டும்'' என்றார்.

அப்பொழுது அவள் புறப்பட்டுப் போயிருந்தால் வான மாமலை நிச்சயம் பொட்டென்று போயிருப்பார்.

ஆனால், அந்தப் பெண் அப்படிப் போகச் சம்மதிக்க வில்லை. சுந்தரமூர்த்தியையும் அழைத்துக் கொண்டு போய் கல்யாண மேடையில் உட்கார்ந்தாள். நாகேந்திரனில் இருந்து அவ்வளவு பேரும் சிலிர்த்துப் போய் விட்டனர்.

''அம்மாடி, உங்க ஆத்துக்குத் தெரிஞ்சா என்னாகும்? இந்தக் கல்யாணத்தை அவா ஒத்துப்பாளா? யோசி'' என்று சொல்லியும் அந்தப் பெண் மாறவில்லை.

''பகவான் எனக்கு இவர்தான் புருஷன்னு சொல்லாம சொல்றான். அப்படி அவன் சொல்லும்போது மத்தவா யார் என்ன சொன்னாலும் எனக்கு கவலையில்லை. இதனால என் அப்பா அம்மா அண்ணால்லாம் என்னை சேர்த்துக் கலேன்னாலும் பரவாயில்லை. என்னை இந்த ஆத்து மாட்டுப் பொண்ணா நீங்க ஏத்துண்டா போதும்'' என்று சொல்லி விட்டாள்.

அப்படி அன்று சொல்லி சுந்தரமூர்த்தியை கைப்பிடித்த அந்தப் பெண் வேறு யாருமில்லை, இந்த பங்கஜம்தான் அவள்.

அதன்பின் அவள் சொன்னபடிதான் ஆயிற்று. அவள் குடும்பத்தில் யாரும் இந்தத் திருமணத்தை ஒப்புக் கொள்ள

வில்லை.

"கல்யாணத்துக்குப் போனியா, இல்லை கல்யாணம் பண்ணிக்கப் போனியா? நாங்கள்லாம் இருக்கறது உனக்கு மறந்து போச்சா? எப்ப நீயா இப்படி ஒரு முடிவு எடுத்தியோ இனி உனக்கும் எங்களுக்கும் ஸ்னானப் பிராப்தி கிடையாது. அதுவும் சோத்துக்கு செத்த ஒரு தமிழ் வாத்தியார்தானா கிடைச்சான் உனக்கு? செத்தா தலைமுழுக்குக் கூட போட மாட்டோம். அதை இன்னிக்கே போட்டுட்றோம்'' என்று கையை உதறிவிட்டனர்.

அவர்கள் ஸ்டேட்டஸும் அந்தஸ்தும் அப்படிப் பேச வைத்துவிட்டது.

பங்கஜம் அசரவில்லை.

சுந்தரமூர்த்திகூட கலங்கிப்போய் அழுதார்.

"அழாதேள்... இப்படி ஆகும்னு நீங்களும் நினைக்கல. நானும் நினைக்கல. நாம திட்டமிட்டு இப்படி எல்லாம் நடந்திருந்தாதான் அது தப்பு. நமக்கு நடந்த விஷயம் பகவத் சங்கல்பம். விதியோட வேலை. விடுங்கோ, இவாளுக்கு நடுவுல வாழ்ந்து காட்டுவோம். காலம் தன்னால ஒருநாள் மாறும். எல்லாரும் திரும்பி வருவா'' என்று ஆறுதலும் சொன்னாள்.

அவள் அன்று சொன்னது இன்று நடக்கப் போகிறது. சங்காத்தமே வேண்டாம் என்று சொல்லி ஒதுங்கிய குடும் பத்தில் இருந்து ஒருவர் வரப்போகிறார். காலம் கோபத்தைக்

கரைத்துவிட்டதா இல்லை, எல்லாவற்றையும் மறந்துவிட்டு, போகட்டும் என்கிற பெரிய மனத்துடன் பங்கஜத்தின் அண் ணன் ராமச்சந்திரன் வருகிறாரா என்பதெல்லாம் அவர் வந்தால் தெரிந்துவிடும்.

கணேசன் அவரை போட்டோவில் கூடப் பார்த்த தில்லை.

பெரிய டாக்டராம்.

அமெரிக்காவிலேயே அதிகம் சம்பாதிக்கும் ஒரு தமிழராம். அவருக்கு அனுஷா என்று ஒரு பெண்கூட இருக்கிறாளாம். அவளும் டாக்டருக்குத்தான் படிக்கிறாளாம்.

இதெல்லாம் கொஞ்சம் போல கசிந்த தகவல்கள்.

அவர்கள் வரும்போது கொஞ்சமாவது சௌகர்யமாக இருக்க வேண்டுமே. எனவேதான் குச்சுவீடு கொஞ்சம் போல மாறிக் கொண்டிருந்தது.

"கணேசா... உன் சைக்கிளை முன்னாடி ரேழில வைக்காதே... பின்னால கொல்லைல கொண்டு போய் போட்டுடு. ரேழில ஒரு நாற்காலியைப் போடு. நன்னா நாலு மிதியடி வாங்கிண்டு வா.

இப்ராஹிம் ராவுத்தர் கடைல மலிவாக் கிடைக்கும். அங்கங்க வாசப்படி கிட்டபோடு. ஒரு டேபிள் ஃபேனை உன் ஃப்ரெண்ட்ஸ் யார்கிட்ட இருந்தாவது வாங்கிண்டு வா. நாலு நாள் கழிச்சு திருப்பிக் கொடுத்துடலாம்."

"அப்ப நாலு நாள் அவர் தங்கப் போறாளாம்மா."

"அப்படித்தான் அண்ணா கடுதாசில எழுதியிருக்கா."

"அதெல்லாம் சும்மாம்மா. நம்மாத்து கொசு ஒரு நாள் அவாளைத் தங்கவிடாது."

"நீ வாயை மூடு. கொசுன்ன உடனேதான் ஞாபகம் வரது. கொசுவர்த்தி ஒரு பாக்கெட்டு வாங்கிண்டு வந்துடு."

"அம்மா.."

"என்னடா?"

"எதுக்கு இப்படி அலட்டிக்கிறே.? ஜார்ஜ் புஷ்ஷா வரப் போறார்? உன் அண்ணாதானே?"

"அதுக்காக... ஏண்டா சாதாரண சௌகர்யம்கூட நாம பண்ணித் தரலைன்னா எப்படிடா!"

"அது சரி.. இவ்வளவு ஆசையை வெச்சுண்டு எப்படிம்மா இத்தனை நாள் உன் அண்ணா, அப்பா, அம்மா இவாளைப் பார்க்காம இருந்தே?"

"நான் பார்க்காம இல்லை. அவாதான் இருந்தா. நீ தப்பா சொல்றே!"

"சரி.. இப்ப என்ன திடீர்னு."

"அப்ப எப்பவும் இப்படியே விடைச்சுண்டு பிரிஞ்சே இருக்கணும்கறியா?"

"இல்லம்மா... எனக்கு என்னமோ சந்தேகமா இருக்கு."

"என்ன சந்தேகம்?"

"அத எப்படி இப்ப நான் சொல்லமுடியும். அவா வரட்டும். கண்டுபிடிச்சு சொல்றேன் பாரு!"

"சரி.. சரி... என் வாயைப் பிடுங்காம போய் வேலையைக் கவனி."

"அது போகட்டும். நான் இன்னிக்கு ட்யூஷன் கிளாஸ் எடுக்கட்டுமா வேண்டாமா?"

"நம்ம ஆத்துல வேண்டாம். வேற எங்கயாவது போய் எடுத்துக்கோ. உன் ஸ்டூடண்ட்ஸ்லாம் சரியான வானரங்கள். வந்தா கையை வெச்சுண்டு சும்மா இருக்கமாட்டா."

பங்கஜம் படபடவென்று பொரிந்து தள்ளினாள். கணேசன் அதையும் ரசித்தான். அப்படியே கடிகாரத்தைப் பார்த்தான். மணி பன்னிரண்டாகியிருந்தது. அவர்கள் மதியம் சாப்பிட வருவதாக எழுதியிருந்தார்கள். இன்னும் இரண்டு மணி நேரம்தான் இருக்கிறது.

தேவுடா!

# 2

***வி****யாக்ரபாதம் என்று ஒரு ஜோதிடர். சதா வானத்தைப் பார்த்தபடியே அமர்ந்திருப்பார். படு அசத்தலான பேர்வழி. அவரை யாராவது பார்க்கப் போனால் வந்தவரிடம் அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்று பொட்டில் அடித்த மாதிரி கூறிவிடுவார். கேட்டால்,*

"எல்லாம் ஒரு கணக்கு தாண்டா அம்பி என்பார்.

அது என்ன கணக்கு என்றால், சிரிப்பார்.

நீ மனுஷனா பொறந்தது ஒரு கணக்கு. இன்னாருக்கு மகனா, இன்ன இடத்துல பொறந்தே பார். அதுகூட ஒரு கணக்குதான். இதோ, இப்ப நீயும் நானும் சந்திச்சுப் பேசிண்டு இருக்கோம் பார் அதுகூட ஒரு கணக்குதான் என்பார்.

எதைப் பார் கணக்கு என்று சொன்னால் எப்படி? எப்படி என்று நிரூபியுங்கள் என்று ஒருநாள் ஒருவர் அவரிடம் முட்டி மோதினார்.

அப்படி மோதியவருக்கு ஒரு பையன். அவன் சிறு வயதிலேயே காணாமல் போய்விட்டான் இன்று ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டால்கூட அடையாளம் தெரியாது. அந்த விவரம் வியாக்ரபாதத்துக்கும் தெரியும்.

அந்த விஷயத்தை வைத்தே கேள்வி கேட்டவனை மடக்கினார் வியாக்ரபாதம்.

"ஓய்... நீர் உன் பையனோடதான் இருக்கீர். பையனோட தான் இருந்தாகணும்னு உம்ம ஜாதகம் சொல்றது. அதே சமயம் அவன் பிரிஞ்சு போய்ட்டா என்ன வேதனையை அனுபவிக்கணுமோ அதையும் அனுபவிக்கணும்னு உம்ம விதியில இருக்கு.

ஆகையால் கூட்டிக்கழிச்சுப் பார்த்தா உங்களோட இருக்கிற ஒரு பையன். குறிப்பா நீங்க பாசம் செலுத்தற ஒரு பையன் உம்ம சொந்தப் பையனாவே இருக்கணும். இதை நீங்க கண்டுபிடிச்சு தெரிஞ்சுக்குங்கோ" என்றார்.

அவரும் தம் வீட்டு மாடியில் குடிவைத்திருக்கும்

***இளைஞனைப் பற்றி தோண்டித்துருவி விசாரித்ததில், அவன் தன் மகன் என்பது பிறகு ஊர்ஜிதமாகியது.***

***உண்மைதான்!***

***எல்லாமே கணக்குதான்!***

***யாரை, யார் எப்பொழுது, எப்படி... சந்திக்க வேண்டும் என்பது முதல், பிரிவது வரை எல்லாமே கணக்குதான்.***

***அந்தக் கணக்கை நம் கர்மங்கள்தான் உருவாக்குகிறதாம். வியாக்ரபாதம் அடித்துக் கூறுவார்.***

**ம**தியம் ஒன்றரைக்கே கார் வந்து வாசலில் நின்று விட்டது. சரியான படகுக்கார். நல்ல நீள அகலத்தில் கண்ணுக்குக் குளிர்ச்சியான மெரூன் கலரை வாரித் தெளித்தது. காரில் இருந்து கணேசனின் மாமா ராமச் சந்திரனும், அவர் மனைவி பார்வதியும், மகள் அனுஷாவும் ஒரு சேர இறங்கினர். அனுஷா காட்டுக் குதிரை கணக்காய் இருப்பாள். ஜீன்ஸ் டீ ஷர்ட் என்று அமெரிக்க நாகரிகம் அவளிடம் சொட்டும் என்று எதிர்பார்த்தான் கணேசன். ஆனால் அவள் தமிழ்நாடு அரசின் மலிவு விலைப் புடவையில், பாந்தமாய் தலை வாரி பூ வைத்துக் கொண்டு அமைதியாகத் தோன்றியது, ஆழமான அதிர்வையே அவனுக்குக் கொடுத்தது.

ராமச்சந்திரனும் கனஜோராய் இருந்தார்.

கோட்டும் சூட்டும் அவருக்கு மிகப் பொருத்தமாய் இருந்தது. இந்த கோட்டும் சூட்டும் சற்று ஆபத்தான ஆடைகள். பலரை இவை சோளக் கொல்லை பொம்மையாக்கியிருக்கிறது. சிலரை கோமாளியாக்கியிருக்கிறது.

ஆனால் சிலருக்குத்தான் நச்சென்று பொருந்துகிறது. கணேசனும் அவரைப் பார்த்தான். பார்த்தபடியே இருந்தான். பங்கஜமும் சுந்தரமூர்த்தியும் வீட்டினுள் இருந்தார்கள். வாச லில் ஒரு பித்தளைத் தாம்பாளத்தில் நல்லெண்ணெய் ஊற்றி வைக்கப்பட்டிருந்தது.

ராமச்சந்திரனும் பார்வதியும் அனுஷாவுடன் வீட்டு வாச லுக்கு வந்து அவளைப் பார்த்தார்கள்.

"நமஸ்காரம்... வாங்கோ மாமா. வாங்கோ மாமி. வா அனுஷா.. பரமதிவ்யமாக, சாங்கோபாங்கமாக அவர்களை அழைத்தான்.

"எங்கப்பா பங்கஜம்?"

"உள்ள இருக்கா மாமா... நீங்க முதல்ல இந்தத் தாம் பாளத்துல இருக்கற நல்லெண்ணையை பாப்பேளாம். அதோ ஆத்துக்குள்ள இருக்கற கண்ணாடில இப்ப நீங்க நிக்கறது தெரியும். அம்மா அதைப் பார்த்துண்டுருப்பா ஒரு மாமாங்க காலம் தொடர்பே இல்லாம பிரிஞ்சு இருந்தாலே இப்படி எண்ணெய்யப் பார்த்துட்டுதான் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கணுமாமே."

கணேசன் ஐதீகம் பேசினான். அதைக் கேட்டு ராமச் சந்திரன் ஒரு சின்ன சிரிப்புச் சிரித்தார். அது, அந்த ஐதீகத்தை இகழ்கிறதா இல்லை, மதிக்கிறதா என்பது தெரிய வில்லை.

ஆனாலும் தாம்பாளத்தில் உள்ள எண்ணெயை பார்த்தார்.

பார்வதியும் அனுஷாவும்கூடப் பார்த்தனர்.

பிறகு மூவரும் உள்ளே நுழையவும் டக்கென்று டேப் ரிக்கார்டரில் நாதஸ்வரம் மங்கள வாத்தியத்தை முழக்கியது.

அனுஷா அதை ரசித்தாள். அப்படியே அந்த ஓட்டு வீட்டை உற்று உற்றுப் பார்த்தாள். அவள் வரையில் இந்த மாதிரி ஒரு நிழல்கூட புதிதாக இருக்க வேண்டும். அமெரிக் காவின் நாய் வசிக்கும் 'டாக் டென்' கூட சராசரி வசதி களோடு பார்ப்பதற்கு ஒரு மினியேச்சர் பங்களாவின் உட்புறம் போல் இருக்கும்.

அவள் முகம் எதனாலோ கோணிக் கொண்டது. கொல் லையில் பசுக்கொட்டாரம் இருப்பதால் படுசன்னமாய் சாண வாசம் எப்பொழுதும் நிலவியபடி இருக்கும். அதுவும் அவள் மூக்கை சிலுப்பியது.

அவளிடம் கொஞ்சம் போல் செருமல்.

அதேசமயம் 'பங்கா...' என்று ராமச்சந்திரனும் 'அண்ணா' என்று பங்கஜமும் ஒருவரை ஒருவர் கட்டிக் கொள்வதும், பின் தாடையை வருடி க்ஷேமலாபங்கள் விசாரிப்பதும் நடந்து முடிந்தது.

கணேசன் மட்டும் அனு மேலேயே கண்ணாக இருந்தான். அனு நல்ல உயரம். நல்ல திடகாத்திரம். சத்தியமாய் எந்த சினிமா டைரக்டர் பார்த்தாலும் ஐந்து லட்சத்துக்கு அட் வான்ஸ் செக்கை நீட்டிவிடுவார்கள். அப்படி இருந்தாள்.

கணேசனும் வாலிபப் பிராயத்தில் அதற்குண்டான ஆசா

பாசங்களோடு இருப்பவன்தானே... என்னதான் ஒழுக்கம், மனக்கட்டுப்பாடு, அது இது என்று சொன்னாலும் இன்றை க்கு இளைஞர்கள் கட்டுப்பாட்டோடு இருப்பது என்பதெல் லாம் காட்டுக்குப் போய் மனசை முடக்கிப் போட்டு தவம் செய்வதற்கு சமமான விஷயம் தான்.

அந்த அளவுக்கு மனத்தோடு மல்லுக்கட்டும் விஷயங்கள் வரிசையாக அல்லவா வாலிபத்துடன் சண்டையிடுகின்றன.

எந்தப் புத்தகத்தை வாங்கினாலும் நடுப்பக்கத்தில் ஒரு நடிகை ஈர உடம்புடன் குளித்தபடிதான் இருக்கிறாள். பிஞ் சாக இல்லாமல் பழமாகப் பார்த்துப் பார்த்து பப்ளிஷ் செய்து விடுகிறார்கள்.

புத்தகத்தைக்கூட கையைக் கொண்டு மூடிவிடலாம். தெருவில் போகும்போது போஸ்டரில் அவர்களின் அங்கங் கள் படும்பாடு இருக்கிறதே. அதைப் பார்க்கும்போது கண்ணை மூடிக் கொள்ளவா முடியும்? முடியணும் என்றால் பாடல்களில் என்ன வாழ்கிறது? 'சக்கரை வள்ளிக் கிழங்கு.. நீ சமைஞ்சது எப்படி?' என்றும், 'அரைச்சு வெச்சிருக்கேன், பொறிச்சு வெச்சுருக்கேன்' என்றும். 'கோழி ருசியா இருந்தா கோழியை வெட்டு, குமரி ருசியா இருந்தா குமரியைக்கட்டு' என்றும் காதில் தேனாறு அல்லவா பாய்கிறது.

இன்றைய இளைய சமுதாயம் எப்படி நல்லவிதமாக இருந்து விடுகிறது என்று பார்த்து விடுகிறேன் என்று அது சப்தம் போட்டுவிட்டு சுற்றிக் கொண்டிருக்கிற மாதிரிதானே தோன்றுகிறது. கணேசன் மட்டும் விதி விலக்கா என்ன?

அனுஷா அவனை உருக்கினாள். அப்படி ஒரு நிறம்; அப்படி ஒரு திடம்; அப்படி ஒரு சுவை அவளிடம் தெரிந்தது.

ஆனால் வந்ததில் இருந்தே ஒரு வார்த்தை யாரோடும் பேசவில்லை. மாமா மட்டும் "எப்படிப்பா இருக்கே? வாட் ஆர் யூ டூயிங் நௌ?'' என்று கேட்டு தலையை எல்லாம் வருடிக் கொடுத்தார். சுகமாக இருந்தது. உறவுகளில் பெரிய உறவு மாமா உறவு.

மிக மகத்தான உறவு அது.

ரத்தத்தில் மாமாவைக் கொண்டால் அதிர்ஷ்டமாம்.

"அண்ணா, கணேசன் அப்படியே உன்னை மாதிரி. சமயத்துல அவன் திரும்பிப் பாக்கறச்சே நீ பாக்கற மாதிரியே இருக்கும். உன்னைப் போலவே இவனுக்கு வெங்காயப் புளிக் குழம்புன்னா உசுரு.''

பங்கஜம், கணேசன் = ராமச்சந்திரன் என்று பேச்சில் பொருள் சொல்லிக் கொண்டிருந்தாள். சுந்தரமூர்த்தி ரசித்துக் கொண்டு நின்றார்.

''சரிண்ணா.. கை கால் அலம்பிண்டு வாங்கோ. முதல்ல சாப்டலாம். அப்புறமா பேசலாம்'' என்று கணேசனைப் பார்த்தாள். கணேசன் அவர்களை கொல்லைக்கு கூட்டிக்கொண்டு போனான். தொட்டித் தண்ணீர் மொண்டு கழுவிக் கொண்டார். பார்வதியும்.

அனுஷா, "வாஷ் பேசின் இல்லையா?'' என்றாள்.

"இங்க அதெல்லாம் இல்லை.."

"தென், எப்படி கை கழுவறது? கழுவுவேளா?" இடக்காகக் கேட்டாள். கணேசன் பதில் சொல்லவில்லை. சரி, ஏதோ பேசத் தெரியாமல் பேசுகிறாள் என்று நினைத்துக் கொண் டான்.

அதன் பின் சாப்பிடும்போதும், அவளிடம் அலட்டல், வாழை இலையை வரிசையாக போட்டபோது.

"வாட் ஈஸ் திஸ் நான்சென்ஸ்.? ஐ வாண்ட் நியூ ப்ளேட்." என்றாள். இறுதியில் பீரோவில் வைத்திருந்த வெள்ளித் தட்டை எடுத்துவந்து போட்ட பிறகுதான் சாப்பிடவே உட் கார்ந்தாள். அந்தத் தட்டையும் அப்படியும் இப்படியுமாக நூறு தடவை பார்த்தாள்.

"புதுத் தட்டும்மா.. அழுக்கெல்லாம் இல்ல."

"அதெப்படி உங்களுக்குத் தெரியும்? பாக்டீரியாஸ் கண் ணுக்குத் தெரியாது. புரிஞ்சுக்குங்கோ." என்றாள் குத்தலாக.

கணேசன் கவனித்துக் கொண்டேயிருந்தான்.

பார்வதி மட்டும் குழறலான ஆங்கிலத்தில் அவளிடம் ஏதோ பேசினாள். அதற்கு அவள் சிரிக்க, நிச்சயம் ஏதோ கேலியான விஷயம் என்பது மட்டும் கணேசனுக்குப் புரிந்தது.

ஒரு வழியாகச் சாப்பிட்டு முடித்தார்கள்.

அவள் மட்டும் பாதிகூடச் சாப்பிடவில்லை.

'காரம். காரம்' என்று கையை உதறினாள்.

சாப்பிட்டு முடித்துவிட்டு தாம்பூலம் போட்டபடி நாற்காலி யில் அமர்ந்தார்கள்.

மறந்தும் பழைய விஷயத்தை ராமச்சந்திரன் தொட வில்லை.

"மாப்ளே... நீங்க இன்னும் சர்வீஸ்ல இருக்கேளா?'' என்று சுந்தரமூர்த்தியிடம் கேட்க, அவர் இல்லை என்கிற மாதிரி தலையை ஆட்டினார்.

''கணேஷ் உனக்கு ஸ்டேட்ஸ் வர்ற ஐடியா எதனா இருக்கா?'' கேள்வி கணேஷ் பக்கம் திரும்பியது.

"ஐய்யோ... நான் எங்க மாமா... அமெரிக்கா என்ன பக்கத்துலையா இருக்கு?"

"சந்திரன்கூட பக்கத்துல இல்லதான். ஆனா அங்கேயே மனுஷன் போகலையா?''

"அது டைம் ஒர்க். இங்க நான் வேலைக்கு போனாதான் ஆத்துல மூணு வேளை சாப்பிட முடியும். இப்போதைக்கு அப்பாவோட பென்ஷன்ல ஏதோ வண்டி ஓடிண்டு இருக்கு."

"ஏன் அமெரிக்கால வேலைக்குப் போகக்கூடாதா?'' ராமச் சந்திரன் அவனை அமெரிக்காவுக்கு இழுத்தே தீருவது என்கிற மாதிரியே பேசுவதாகத் தோன்றியது.

"எங்கண்ணா... அதுக்கெல்லாம் பிராப்தம் வேண்டாமா?'' பங்கஜம் இடையிட்டு அலுத்துக் கொண்டாள்.

"பைத்தியம் மாதிரி பேசாத, 'ஈவ் நைட்டி'ன்னு ஒரு பறவை

வருஷத்துக்கு பத்து தடவை அமெரிக்காவுக்கும் இந்தியா வுக்கும் மைக்ரேஷன்கற பேர்ல வந்துட்டு போயிண்டிருக்கு. அப்ப அதுக்கு நிறைய பிராப்தம் இருக்கறதா அர்த்தமா?''

''என்ன மாமா சொல்றேள்?அதுக்கு பாஸ்போர்ட்,விசான்னு எதுவும் கிடையாது. ஆனா எனக்கு அப்படியா?''

"இப்ப உனக்கு பாஸ்போர்ட், விசா வேணும் அவ்வளவு தானே.''

"அங்க வேலை யார் தருவா?''

"அது என் பொறுப்பு. உனக்கு சமஸ்க்கிருத மந்திரங்கள் தெரியுமா?"

ஓரளவு."

"அது போறும். சொச்சத்தை கத்துண்டா வந்துடும். அங்க ஒரு கோயில் கட்டிண்டிருக்கோம்.முருகன் கோயில். உன்னை ஒரு 'ப்ரீஸ்ட்'ன்னு சொல்லி தூக்கிண்டு போய்ட்றேன்.''

''ப்ரீஸ்ட்டா... நானா? நான் ஒரு சாதாரண அகடமி டிகிரி ஹோல்டர். என்னைப் போய் வேதம் தெரிஞ்சவன்னா நம்பு வாளா?''

"இங்க நம்பமாட்டா... ஆனா அங்க அப்படியில்ல கணேஷ்.''

"ஜய்யோடா... இவன் இங்க சந்தியாவந்தன மந்திரத் தையே ஒழுங்கா சொல்றது கிடையாது. இவன் எப்படி மாப்ள..?''

சுந்தரமூர்த்தி கட்டைப் போட்டார்.

"இல்ல மாப்ள... இண்டியால ஒரு அகடமிக் டிகிரிக்கு பெருசா என்ன மதிப்பு கிடைச்சுட முடியும்? இப்பல்லாம் மினிமம் குவாலிஃபிகேஷனே ஒரு போஸ்ட் கிராஜிவேட் டிகிரியாத்தான் இருக்கு. மிஞ்சி மிஞ்சிப் போனா ஒரு மூவாயிரம் சம்பளம் கிடைக்குமா?"

"அவ்வளவுதான்."

"அங்க நான் முப்பதாயிரம் வாங்கித்தரேன். தங்கிக் கொள்ள எல்லாம் ஃப்ரீ என்ன சொல்றேள்?"

ராமச்சந்திரனிடம் உற்சாகம் பொங்கி வழிந்தது. சுந்தர மூர்த்தியும் மகனைப் பார்த்தார். அவன் முகத்திலோ தீவிர சிந்தனை..

"அட என்னப்பா யோசிச்சுண்டு. பி.ஈ., எம்.ஈ. முடிச்ச வாளே அமெரிக்கால எண்ட்ரி கிடைக்காம தவிச்சுண்டு இருக்கா. நான் உன்னை சுலபமா கூட்டிண்டு போறேங் கறேன். இவ்வளவு தூரம் யோசிக்கிறியே?"

"இல்ல மாமா... எனக்கு அமெரிக்கா வரது பத்திகூட ஆட்சேபனை இல்லை. ஆனா கோவில்ல ப்ரீஸ்ட்டா இருக் கறத நினைச்சாதான்."

"சரிதான், கோவில்ல மணி ஆட்றவன்தானேன்னு மத்தவா நினைச்சுடுவாளேன்னு நினைக்கறியாக்கும்?"

"ஆமாண்ணா... அப்புறம் அவனுக்கு யார் பொண்ணு கொடுப்பா?"

பங்கஜமும் வக்காலத்து வாங்கினாள்.

உடனே ராமச்சந்திரன் அவர்களை கூர்மையாகப் பார்த்தார். சில வினாடிகள் மௌனம் கூட.

அதில் ஏதோ பயங்கரமான ஒரு பொருள் இருப்பதாகக் கூடத் தோன்றியது.

''என்னண்ணா, எதுக்கு இப்படிப் பாக்கறே?''

''பாக்காம... நான் அந்த பாய்ண்ட்டை யோசிக்காம இருப்பேனா?''

"அப்படின்னா?''

"அவன் கல்யாணத்தைப்பத்தி நீ ஏன் கலவரப்படறே? நான் இத்தனை வருஷம் கழிச்சு இந்தியா வந்துருக்கறதும், அதுவும் நேரா உன் ஆத்துக்கு பழைய பகையை எல்லாம் மறந்துட்டு வந்துருக்கறதும் எதுக்குன்னு நினைக்கறே?''

"அண்ணா...''

"இல்ல எதுக்குன்னு நினைக்கறே.? சும்மா சொல்..''

''தெரியலியே... இப்படி கேட்டா நான் என்னத்தண்ணா சொல்வேன்?''

''சரிதான்... இந்த ராமச்சந்திரனை நீ புரிஞ்சு வெச்சுண்டு இருக்கறது அவ்வளவுதானாக்கும்?"

''என்னண்ணா சொல்றே?''

"தோ பாரு பங்கஜா.. உன் விஷயத்துல நாங்க எல்லாரும் எங்க கடமையை தவறிட்டோம். நீ மாப்ளையை கல்யாணம்

பண்ணிண்ட ஒரே காரணத்துக்காக உனக்கு ஒரு தாலிகூட பண்ணிப் போடலை நாங்க. மாப்ளையையும் கொஞ்சமும் கௌரவிக்கலை. இதை எல்லாம் நான் அப்பப்ப நினைச்சுப் பார்த்து அழுதுருக்கேன் தெரியுமா?"

ராமச்சந்திரன் குரல் தழுதழுத்தது.

"ஆமாம் பங்கஜம்... அப்பப்ப இப்படி மூட்அவுட் ஆயிடு வார். மூணு நாளாகும் சரியாக" - பார்வதி வக்காலத்து வாங்கினாள்.

அனுஷா ஒரு கால்குலேட்டர் போன்ற சாதனம் ஒன்றை வைத்துக் கொண்டு அதில் கம்ப்யூட்டர் கேம் ஒன்றில் புதைந் திருந்தாள்.

பங்கஜத்துக்கு கண்களில் நீர் துளிர்த்து விட்டது.

"அந்த மாதிரி அன்னிக்கு உன்னை நிர்தாட்சண்யமா புறக் கணிச்ச பாவத்துக்கு ஒரு பிராயச்சித்தம் செய்யத்தான் இப்ப வந்துருக்கேன்."

அவர் பதிலில் ஒரு மர்மம்.

''உடைச்சே பேசுங்களேன். எதுக்கு பீடிகை?''

பார்வதி எடுத்துக் கொடுத்தாள்.

''சரி... பார்வதியே சொல்லிட்டா... நான் உடைச்சே பேசிட்றேன். எனக்கு ஒரு பொண்ணு. ஒரே ஒரு பொண்ணு. எனக்கு பின்னால் என் ஆஸ்திக்கு அவதான் வாரிசு. அப்படிப்பட்ட அவளுக்கு உன் பிள்ளையை மாப்ளையா

கேக்கறேன் தருவியா?''

ராமச்சந்திரன் கேட்டு முடித்த நொடி பங்கஜத்துக்கு தலைக்கு மேல் ஒரு இமயமே உருகிக் கரைந்து, காது மூக்கெல்லாம் சில்லிட்ட மாதிரி ஆனது.

சுந்தரமூர்த்தியே ஒரு வினாடி ஷாக் அடித்த மாதிரி ஆகி விட்டார். ஆனால் கணேசன் மட்டும் கொஞ்சம் நிதானத்தில் இருந்தான். அவர் அப்படிச் சொன்ன நொடி அனுஷாவும் நிமிர்ந்து அவனை ஒரு பார்வை பார்த்தாள்.

அதில் தனக்கு ஒரு ஆட்சேபமும் இல்லை என்கிற மாதிரி ஒரு சிக்னல்.

"அண்ணா... அண்ணா... நிஜமாவா சொல்றே?''

"சத்யமா சொல்றேன். நீ மட்டும் சரின்னா, வர்ற முகூர்த் தத்துலையே கல்யாணத்த வெச்சுட்றேன்."

''என்னண்ணா... உன் பொண்ணு ஒரு டாக்டர்.. இவன்... இவன்... இவன் ஒரு சாதாரண டிகிரி ஹோல்டர்.''

"பைத்தியம்... படிப்பு அந்தஸ்த்தெல்லாம் பாசத்துக்கு முன் னால சுண்டைக்காய். இல்லேன்னா இவனை சாரி, இனிமே இவன்னு கூப்பிட்றது தப்பு. இவரை அமெரிக்கா கூட்டிண்டு போக இப்படி எல்லாம் குறுக்கு வழியை கண்டுபிடிப்பேனா?''

"அது சரி... அங்க உன்னை மத்தவா கேலி பண்ண மாட் டாளா? என்ன ராமச்சந்திரா போயும் போயும் ஒரு பூசாரி தான் உன் பொண்ணுக்கு கிடைச்சானான்னு கேட்டா என்ன பண்ணுவே?''

"இங்கதான் ஸ்டேட்டஸ் காசெல்லாம். அங்க இந்த மாதிரி யெல்லாம் சிந்திக்கவே அவாளுக்குத் தெரியாது. அப்படியே கேட்டாதான் என்ன...? ஒரு கடவுளோட பிரதிநிதியான பூசாரியை விடவா இன்னொரு டாக்டரும், எஞ்சினியரும் ஒசத்தி?"

"அண்ணா என்னை நீ தவிக்க விட்றியே..."

"என்ன சொல்றே பங்கஜம், உனக்கு இஷ்டம் இல்லியா?"

"ஐயோ இது சந்தோஷத் தவிப்பு."

"அது சரி... மாப்ளை என்ன சொல்கிறார்? வாயே திறக் கலையே." ராமச்சந்திரன் கணேசனைப் பார்த்தார். அவனோ வேட்டியின் ஒரு முனையைப் பிடித்தவனாக "அம்மா, நான் ஆஞ்சநேயர் கோவில் வரைக்கும் போய்ட்டு வந்துட்றேன்" என்றவனாக வேறு எந்தப்பேச்சும் பேசாமல் கிளம்பிச் சென் றான்.

ராமச்சந்திரனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

சுந்தரமூர்த்தி சமாளிக்கத் தொடங்கினார்.

"அவன் எதுன்னாலும் ஆஞ்சநேயர் கோவிலுக்கு போய் அங்க அவரன்ட உத்தரவு கேட்டுட்டுதான் ஒரு முடிவுக்கு வருவான்" என்றார்.

"என்ன மாப்ள சொல்றேள்...?தனியாவா போய் கேக்கறது? நாமளும் போலாமே!"

"இல்ல... அங்க ஒரு உபாசகர் இருக்கார்.. அவனுக்கு

அவர் ஃப்ரெண்ட். ரொம்ப நல்ல மனுஷர். அவரன்ட பேசிட்டு வருவான். கவலைப்பட வேண்டாம். அவர் அவன் முன்னேற்றத்துக்கு குறுக்க நிற்கமாட்டார்.''

சுந்தரமூர்த்தி நம்பிக்கையாகத்தான் பேசினார்.

ஆனால் ராமச்சந்திரன் முகத்தில்தான் லேசான கவலை ரேகை.

# 3

*பிராப்தம் பற்றி அழகியசிங்கம் என்கிற உபாசகர் பிரமாதமாக சொல்வார். அது நம்முடைய கர்மவினை களால் வருவதுதான் என்பார். "கர்மவினை. கர்மவினை. என்கிறார்களே, அப்படி என்றால் என்ன. ஒருவன் அவரிடம் கேட்டான்.*

*"ஒரு மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் பதில் விளைவு என்று ஒன்று உண்டு.*

*கைதட்டினால் சப்தம் கேட்கிறது. விதை விதைத்தால் மரம் வளர்கிறது. தூங்கினால் ஓய்வு கிட்டுகிறது. வேலை செய்தால் உடம்பில் சக்தி செலவாகிறது. இப்படி ஒவ் வொரு சிறு அசைவுக்கும் பதில் விளைவு உண்டு. இதில் நமது செயல், கர்மம் என்றால். எதிர்விளைவே வினை" என்றார்.*

*"அது சரி. இந்த கர்மவினை எப்படி கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்? பதில் விளைவு சில சமயம் தாமதமாக வருகிறதே! உதாரணமாக, வாலிப பிராயத்தில் ஒருவன்*

இரு இளம் பெண்ணை கெடுத்து விடுகிறான். அதற்கு தண்டனை அவனுக்கு முதுமையில் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். இது எப்படி சாத்தியம்?

கடவுள் என்ன நோட் போட்டு எழுதி வைத்துக் கொண்டு இன்ன கர்மத்திற்கு இன்ன தண்டனை என்றா தருவார்? அதுவும் அவருக்கு வசதிப்படும் பொழுது. இடிக்கிறதே. உலகில் உள்ள அவ்வளவு பேருக்கும் ஒரு கடவுளால் இதை எப்படி செய்ய முடியும்?

என்னதான் அவர் சூப்பர்பவர் உடையவராக இருந்தாலும் இது வெட்டி வேலை இல்லையா? ஒரு மனிதனை ஏன் தப்போ சரியோ செய்ய விட வேண்டும்? பிறகு தண்டனையும் தரவேண்டும்?

கடவுள் இப்படி சுற்றி வளைத்து மூக்கைத் தொடுவதற்கு பதிலாக எல்லோரையும் நல்ல புத்தி உள்ளவர்களாக படைத்துவிட்டால் ஒரு பிரச்சினையும் இல்லையே" என்றெல்லாம் அந்த உபாசகரிடம் கேள்விகளை அடுக்கினான் அவன்.

உபாசகர் சிரித்தார். பதிலுக்கு, "எல்லோரும் நல்லவராக இருந்து விட்டால், எப்படி இருக்கும் தெரியுமா?" என்று கேட்டார்.

"எப்படி இருக்கும்."

"ஊரே தூங்கும். ஒரு ராத்திரி எப்படி இருக்கும்?" "நிசப்தமாக."

"ஏன்?"

"எல்லோரும் தூங்குவதால், எந்த செயல்பாடும் நட வாததால்."

*"நல்லவர்களாக இருந்தால் அப்படித்தான் இருக்கும். இயக்கமே இருக்காது. பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசமே இருக்காது" என்றார்.*

*எப்படி? யோசியுங்கள்...*

**வ**டக்குத் தெருவில் இருக்கிறது அந்த ஆஞ்சநேயர் கோவில். பழமையான கோவில், பழமை என்றால் ஆயிரம் வருஷத்துக்குப் பழமை. ஆஞ்சநேயரும் பார்க்க அவ்வளவு அழகா இருப்பார். வரப்பிரசாதி.

காலை இல்லை... மாலை இல்லை... எப்பொழுதும் ஒரே கூட்டம்தான்.

சதா இளம் பெண்கள் அங்கப்பிரதட்சணம் செய்து கொண் டிருப்பார்கள். பட்டாச்சாரிக்கும் ஓய்வு ஒழிச்சலே இருக்காது. அபிஷேகம், வடைமாலை சாற்றுவது, வெற்றிலை மாலை சாற்றுவது என்று இஷ்டத்துக்கும் ஐதீகக் கொண்டாட்டங்கள்.

அந்த கோவிலுக்கு முதல்முதலாக கணேசன் வந்த போது அதை எல்லாம் பார்க்க அவனுக்கு வேடிக்கையாக இருந்தது.

கொஞ்சம் குயுக்தியாகவும் யோசித்தான்.

ஊரில் யாராவது விஷமம் செய்தால் குரங்குச் சேட்டை என்கிறோம். ஆனால் அந்த குரங்கு உருவில் ஒரு உருவத் தையே வழிபடுகிறோம்.

மனிதன் பயங்கர குழப்பக்காரன்.

ஒரு பக்கம் மிருகங்களை வெட்டிக்கொலை செய்து அதை

கபளீகரம் செய்கிறான்; மறுபுறம் அதையே கடவுளாகவும் கும்பிடுகிறான்.

மிருகங்களை ஒரு கணக்கில் வைக்கலாம்.

இவன் பயங்கரமானவன். சரியான நிறம் மாறி. என்று தான் சிந்தித்தான்.

நாத்திகவாதிகள் இப்படி எல்லாம்தானே சிந்திக்கிறார்கள் இல்லையில்லை, இப்படி சிந்திக்கப் போய்தான் நாத்திகமே மனத்துக்குள் வளர்கிறது.

கல்லில் ஒரு சிலை. அதற்கு வடை, வெற்றிலை என்று எத்தனை அர்ப்பணங்கள்? பசிக்கிறது என்று கேட்கும் ஒருவருக்கு இப்படி எல்லாம் தர இந்த மனிதனுக்கு மனம் வருமா? தந்தாலும் அவர்கள் காலில் விழுந்து வணங்குவானா?

என்ன ஒருகொடுமை என்று புத்தி கன்னாபின்னாவென்று அன்று யோசித்தது. அவன் யோசிக்கவில்லை. அவன் படித்த புத்தகங்கள் அவனை அப்படி யோசிக்க வைத்தன. அவனது நட்பு வட்டமும் ஒரு தினுசான வட்டம்.

அவனிடம் கேலியாகவே எதையும் பேசுவார்கள்.

''ஏ... கணேசா, ஆகாயத்துல இருக்கிற சாமிக்கு பசி எடுத்தா அவர் என்ன சாப்பிடுவார்?''

''எப்பவும் கையை அருள்தரத் தூக்கி வெச்சுகிட்டிருக் கறவருக்கு கை வலிக்குமே! எந்த தைலம் தேச்சுக்குவார்?''

''இந்திரலோகம்-சந்திரலோகம் எல்லாம் சொல்றாங்களே.

அங்க டாய்லெட் பாத்ரூம்லாம் இருக்குமா?''

இவையெல்லாம் அவர்கள் கேட்டவைதாம். அவனுக்கும் அப்படிக் கேட்டதில் ஆரம்பத்தில் தவறு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

கேள்விகளிலேயே பிரதானமான ஒரு கேள்வி அவனை ரொம்பவே பாதித்துவிட்டது.

''கடவுளுக்கு எதற்கு இவ்வளவு நகை நட்டுக்கள்? யாரை கவர்வதற்காக அவர் இதை அணிகிறார்? அவர் படைத்த உலகில் அவர் படைத்த மனிதர்கள், அவர் இப்படி காஸ்ட் லியாக இருந்தால்தான் மதிப்பார்கள் என்பதாலா? நாம் மதித்தும் வணங்கியும் போற்றியும் செயல்படுவதால் அவருக்கு கிடைப்பது என்ன?

இது ஒரு அரசியல்வாதி தன்னைப்பற்றி புகழ்ந்து பேசுவதற் காக தனது செலவில் கூட்டம் போட்டு எடுபிடிகளை ஏவி விடுகிற ஒரு அற்பத்தனமான செயலாக இல்லையா? இப்படி நமது புகழ்ச்சிக்கு மயங்கும் ஒரு கடவுளா சர்வ வல்லமை படைத்தவர்? உண்மையில் கடவுள் என்று ஒருவர் இருந்தால் அவர் இப்படியா இருப்பார்?'' இதுதான் அந்தக் கேள்வி.

இதை, அவன் அப்பா சுந்தரமூர்த்தியிடம் கேட்டபோது அவருக்கு கோபம்தான் வந்தது.

''கணேசா, இப்படி சிந்திக்கறது தப்பு. மகாபாவம். என்றார்''

கணேசனுக்கு ஒரு வாத்தியார் இருக்கிறார்.

அவரோ, ''இப்படி எல்லாம் சிந்திக்கிற நீ என்ன பெரிய

புடுங்கியா..? இந்த உலகில் காலகாலமாக பூஜை புனஸ் காரம் செய்பவர்கள் எல்லாம் முட்டாள்களா..? இப்படி எல் லாம் நாத்திகவாதம் செய்தால் நாக்கு அழுகிவிடும். அதாகி விடும், இதாகிவிடும்'' என்றாரே ஒழிய அவன் கேள்விக்கு பதிலைச் சொல்லவில்லை.

இருந்தாலும் கணேசன் அசரவில்லை.

அந்தக் கேள்வி மிக நியாயமான ஒன்றாகவே எனக்குப் படுகிறது. இதற்கு எனக்கு சரியான பதில் தெரியாத வரை நான் எந்த கோவிலுக்கும் செல்லவோ வழிபடவோ மாட் டேன் என்று இருந்துவிட்டான்.

இந்த நிலையில்தான், ஒரு நாள் சுந்தரமூர்த்தி ஆஞ்ச நேயர் கோவிலுக்கு போய் வடை மாலைக்கு பணம் கட்டி விட்டு வரச் சொன்னார்.

''அந்த காசுக்கு நாலு பேருக்கு சாப்பாடு வாங்கித் தரலாம். புண்ணியம்'' என்று எதிர்வாதம் செய்தான். பேச்சு வளர்ந்து கொண்டே போனது. கடைசியில் ''வடை மாலை வேஸ்ட்.. பயங்கர முட்டாள்தனம்.'' என்று கூறிவிட்டு வெளியே போய் விட்டான்.

பங்கஜம் அதை எல்லாம் பார்த்துவிட்டு அழுதாள். ஒரே பிள்ளை. இப்படி நாத்திகம் பேசி கெட்டுப் போவதாக கருதி ஆஞ்சனேயரிடமே அப்ளிகேஷன் போட்டாள்.

ஆஞ்சநேயா... நீதான் அவனுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கணும். அவன் வேணும்னு இப்படிப் பேசலை.. ஏதோ

அவன் கெட்ட நேரம் இப்படிப் பேசறான்'' என்றாள்.

"கெட்ட நேரமா? நல்ல நேரம்னு சொல்லுங்கோ'' என்று ஒரு பதில் உடனே வந்தது.

"யாரது திரும்பிப் பார்த்தாள். ஒரு பெரியவர். அழுக்கு வேட்டி, துண்டோடு கல்யாண சமையல்காரர் மாதிரியே நின்று கொண்டிருந்தார்.

"நீங்க யாரு?''

"நான் ஆஞ்சநேய கோவில் மடப்பள்ளி பிராமணன்.

"இங்க எங்க வந்தேள்?''

"மாமா வடைமாலைக்கு பணம் தரதா சொல்லியிருந்தார். கோவிலுக்கு வருவார்னு பார்த்தேன் வரலை. அதான் நேர்ல வந்துட்டேன்."

"அது சரி... என் பிள்ளையாண்டானுக்காக நான் புலம்பி னதை கேட்டுட்டு நல்லதுக்குதான்னு சொன்னேளே. எப்படி?''

"பின்ன இல்லியா... அந்த பரமாத்மாவை புரிஞ்சுக்க ஆன்மீக ஐதீகங்களைவிட, நாத்திக சிந்தனை பரம உசித மானதாச்சே!''

"அதான் எப்படி?''

"ஏமாந்துடக் கூடாதுங்கற எண்ணம் யார்கிட்ட எல்லாம் ரொம்ப பலமா இருக்கோ. யாருக்கெல்லாம் ஆழ் மனசுல பயம் அதிகமா இருக்கோ, அவாதான் எதையும் நம்பாம எதைப் பார்த்தாலும் ஏன் எதுக்கு எப்படின்னு சந்தேகத்தால

உந்தப்பட்டு கேள்வியா கேட்பா. ஒரு வகைல கேள்வி கேட்டு அதுக்கு விடையை தெரிஞ்சுண்டு செயல்படறதுதான் நல்லது.''

''என்ன சொல்றேள்.? கடவுள் கண்ணுக்கு தெரிஞ்சாதான் நம்புவேன்னு ஒருத்தன் சொல்றான். நம்பாத ஒருத்தனுக்கு கடவுள் கண்ணுக்கு தெரிவாரா... அவர் என்னிக்கு தெரி யறது, அவன் என்னிக்கு நம்பறது? ஆயிரமாயிரம் வருஷம் தவம் பன்றவாளுக்கே அவர் கண்ணுல தெரியறது இல் லையே!''

பங்கஜம் எல்லோரையும் போலத்தான் அவர் சொன்ன தற்கு எதிர் கேள்வி கேட்டாள். அவர் முகத்தில் திரும்பவும் ஒருவித மந்தகாசச் சிரிப்பு.

அவளுக்கு புரிந்துவிட்டது.

இந்த ஆள் ஒரு மடப்பள்ளி பிராமணன்.

இவனுக்கு பெரிதாக என்ன தெரிந்து விடப்போகிறது? இவனை மதித்து இவ்வளவு பேசியதே அதிகம் என்று தோன்றியது.

"சரி... இருங்கோ, வடை மாலைக்கு பணம் தரேன். வாங்கிண்டு போயிடுங்கோ. இவரோட ஜென்ம நட்சத்திரம் அன்னிக்கு சார்த்தினா போறும்'' என்றபடியே பேச்சை மாத்தி யவளாக திரும்பிச் சென்றாள்.

கச்சிதமாக அப்பொழுது பார்த்து வெளியே போயிருந்த கணேசனும் சைக்கிளில் வந்து சேர்ந்தான். அவரைப் பார்த்து

விட்டு கொஞ்சம் முகத்தைக் கோணிக் கொண்டான்.

"அம்பி எங்கையோ போய்ட்டு வரேபோல இருக்கே!" அவர் மெல்ல பேச்சை ஆரம்பித்தார்.

"இது என்ன கேள்வி..? வெளியன்னா எங்கையாவது போய்ட்டுதானே வரணும்."

"அது சரி... போன இடத்துல மஞ்சளா, சிகப்பா சில விஷயங்கள் கண்ணுல படலாம். அதனால மனசுல சஞ்சலங் களும் ஏற்படலாம் இல்லையா?"

அவர் அப்படிக் கேட்டதுதான் தாமதம்,அவன் கன்னத்தில் வீறு கொண்டு யாரோ அறைந்த மாதிரி இருந்தது.

பஸ் ஸ்டாண்டை ஒட்டி ஒரு சின்ன சந்து இருக்கிறது. அந்த சந்தில் பெருமாள் கோவில் தேர் ஒன்று நிறுத்தப் பட்டி ருக்கும்.

வருஷத்திற்கு ஒரு நாள் மட்டுமே ஓடும் தேர். மற்ற நாளில் அது தேமே என்று நின்றபடி இருக்க, அதில் தப்புத் தப்பாய் ஏதேதோ நடப்பதாக கேள்வி.

கணேசன் காதிலும் விழுந்தது. நண்பன் சுந்தரத்துடன் அந்தப் பக்கமாய் போகும்போது என்ன நடக்கிறது என்று அவன் கழுத்து, அவன் மனத்தை மீறிக் கொண்டு வளைந்து, திரும்பி கவனிக்கும். இன்றும் கவனித்தது. அப்போது வேசி நீலமணி மஞ்சள் புடைவையும், சிவப்பு ரவிக்கையுமாய் விசேஷ காம்பினேஷனில் அங்கே ஒருவனுடன் கட்டி உருண்டு கொண்டிருந்தாள். அதை கணேசன் இன்று சற்று

தீர்க்கமாகவே பார்த்துவிட்டான். அதனால் உடம்பெல்லாம் மண்ணெண்ணெய் ஊற்றி தீயிட்டதுபோல் ஒரு உஷ்ணம் கூட.

அந்தப் பார்வையும் அதனால் வந்த பதற்றமும் தனக்கு மட்டுமே தெரிந்த ரகசியம் என்று நினைத்து கொண்டிருந்த வனுக்கு அந்த மடப்பள்ளி பிராமணனின் பதில் கேள்வி திக்குமுக்காட விட்டது.

எதிரில் பங்கஜம் வேறு பணத்துடன் வந்து கொண்டிருந்த தால், உங்களுக்கு எப்படித் தெரியும் என்று கேட்கத் தோன்ற வில்லை. ஒரு வினாடி நின்று ஒரு பார்வை மட்டும் பார்த்து விட்டு உள்ளே போனான்.

"தம்பி.. மனச அலைய விடாதே. அப்புறம் காலைல சாப்பிடும் போது, பச்சை மிளகாயை கடிச்சின்டு தண்ணி குடிச்சியே அந்த மாதிரி கஷ்டப்படும்படி ஆயிடும்."

அவர் அடுத்த அதிர்ச்சியை அளித்தார். கணேசனுக்கு வியர்த்து விட்டது. அவரும் அதன்பின் நிற்கவில்லை. பணத்தை வாங்கிக் கொண்டு போய்விட்டார்.

ஆனால், கணேசன் மனத்தில் ஒரு சக்கரம் சுழல ஆரம் பித்து விட்டது.

"யார் இந்த மனிதர் தனக்கு என்று தெரிந்த விஷயங்கள் எப்படி இவருக்கு தெரிய வந்தது?

கேள்வியில் விழுந்து நெளிந்தான். புரண்டான். பங்கஜம் கூட அப்பொழுது கேட்டாள்.

"என்னடா ஒரே சிந்தனைல இருக்கே?"

"ஒண்ணுமில்லம்மா."

"அப்ப ஏதோ குழப்பம்னு சொல்லு!"

"ஆமாம் குழப்பம்." அவனிடம் எரிச்சல் பீறிட்டது.

"என் மேல ஏண்டா எரிஞ்சு விழறே.? நான் என்னன்னு தானே கேட்டேன்?"

"நானும் இப்ப திரும்பி கேக்கறேன். அந்த பிராமணர், ஆஞ்சனேயர் கோயில் பரிசாரகர்தானே?"

"ஆமாம்."

"அவரண்ட என்னபப்த்தி எதனா பேசினியா?"

"பேசினேன்."

"என்ன... நான் சாப்பிடும்போது மிளகாயை கடிச்சிண்ட துல இருந்து எல்லாத்தையுமா பேசுவே?"

"நீ என்னடா சொல்றே? நீ எப்ப மிளகாயைக் கடிச் சிண்டே? அப்படியே கடிச்சிண்டாதான் இப்ப என்ன, அதெல் லாம் ஒரு விஷயமா?"

"அப்ப அவருக்கு எப்படி தெரியும்?"

"போய் அவரண்டையே கேள்... என்னண்ட கேட்டா? ஆமாம் அந்த மனுஷன் இதையெல்லாம் சொன்னாரா என்ன?"

"ஆமாம்."

''எதுக்கு?''

''எதுக்குன்னா..? என்னமோ உளறிட்டு போறது அந்த ஆள்."

"அவர் உளறலை... நீதான் ஏதோ உண்மையை மூடி மறைக்கிறே!''

"நீ ஒருத்திம்மா.. எனக்கு பின்லேடன் இருக்கற இடம் தெரியும். வீரப்பன் இருக்கற இடம் தெரியும். ஆனால் நான் உண்மையை சொல்லாம மறைச்சுண்டு இருக்கேன் பாரு."

எரிந்து விழுந்தான். அதன்பின் பங்கஜம் அவனிடம் வாயாடவில்லை. போய்விட்டாள். திரும்பவும் அவனுக்குள் அதே கேள்வி.

இந்த சமையல்காரனுக்கு எப்படித்தான் நீலமணி புணர் வதைப் பார்த்ததும், சாப்பிடும் போது மிளகாயைக் கடித்துக் கொண்டதும் தெரியும்?

மனத்துக்குள் அதே கேள்விதான் ஓடியது. அப்படியே பல்வேறு வேலைகளுக்கு நடுவே அது அடங்கியும் போனது.

சில நாள்கள் கழித்து, அந்த பிராமணரை ஒரு விபத்தின் போது சந்தித்தான்.

சைக்கிளில் போகும்போது, ஒரு மோட்டார் பைக்காரன் வந்து மோதியதில் தலை குப்புற விழுந்து கை மணிக்கட்டு மாம்பழம் கணக்காக பழுத்து வீங்கிவிட்டது. அப்போது, எதார்த்தமாக கையில் மளிகைச் சாமான்களோடு அந்த மடப் பள்ளி பிராமணர் வந்தபடி இருந்தார். அவன் விழுந்து

வலியோடு தவிப்பதைப் பார்த்துவிட்டு நெருங்கி வந்து, 'ஐய்யய்யோ...' என்று பதறி கையை தடவியும் கொடுத்தார். சுற்றி நின்று வேடிக்கை பார்த்த சிலர், ''தம்பி கை வீங்குது. அனேகமா எலும்பு முறிஞ்சு ஃப்ராக்சர் ஆகியிருக்கணும். டாக்டரைப் போய்ப் பாருங்க!'' என்றனர்.

அவனுக்கும் அதுதான் சரி என்று தோன்றியது. ஆனால் அவரோ, "கவலைப்படாதே. நான் மந்திரிக்கிறேன். எல்லாம் சரியாப் போயிடும்'' என்றபடி அவன் கையைத் தடவிக் கொடுத்தார். அவனுக்கு இந்த மந்திரிப்பில் எல்லாம் நம்பிக்கை கிடையாது.

இருந்தும் அவர் தடவிக் கொடுக்கும்போது பரமசுகமாக இருந்தது. விழுந்தது, அடிபட்டது எல்லாமே மறந்தும் போனது.

அவர் உருவிவிட்டபடியே, "வீட்டைவிட்டு கிளம்பும் போது நிலைகால்ல தலைதட்டினா கொஞ்சம் உக்காந்துட்டு கிளம் பணும். இல்லாம அதே வேகத்துல கிளம்பின சூட்சும தேகம் பண்ணின எச்சரிக்கைக்கு அர்த்தமில்லாம போயிடும்'' என்றார்.

அவனுக்கு சுரீர் என்றது. ஏன் என்றால் அவன் கிளம்பும் போது அப்படித்தான் நடந்தது. நெற்றியைத் தேய்த்துக் கொண்டே கிளம்பி விட்டான். அது எப்படி இங்கே இவ ருக்குத் தெரியும் என்கிற மாதிரி பார்த்தான். கண்களில் ஏகத் துக்கும் விரிவு.

''என்ன பாக்கறே?''

"இல்ல... என் தலைல அடிபட்டது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"அதான் நெற்றியைப் பார்த்தாலே தெரியறதே. எலுமிச்சம் பழம் ஒண்ணு பழுத்திருக்கே நெத்தியில..."

அவர் சிரித்தார்.

இல்லை அவர் சமாளிக்கிறார். தலையில் அடிபட்ட காயம் பல விதங்களில் நிகழலாம். அது எப்படி நிலைகாலில் என்று கச்சிதமாகக் கூறமுடியும்?

இவர் யார்?

மோடி மஸ்தானா..?

பிளாக் மேஜிக்காரர்கள் என்பார்களே அந்தரகமா..?

சித்து வேலைக்காரரா..?

கையை உருவிவிடும்போது எப்படி இத்தனை பரவசமாக இருக்க முடியும்? மருந்து சாப்பிட்டால்கூட குணமாக கொஞ்ச அவகாசம் தேவைப்படுமே. எப்படி. எப்படி இவரால் தொட்ட மாத்திரத்தில் வலியை என்னிடம் இருந்து பறித்து, அடக்க முடிந்தது?

இவர் யார்.?

இவர் யார்.?

"என்ன தம்பி... நான் யாருங்கற கேள்வி மண்டையை பொளக்கறதா?"

அவர் கேட்டு மேலும் அதிர்வளித்தார். அப்படியே சைக்கிளைத் தொட்டுத் தூக்கி ஒரு ஓரமாய் நிறுத்தி விட்டு, தனது மளிகைச் சாமான் பையையும் அதன் கேரியர் மேல் வைத்து விட்டு, அருகில் காலியாகக் கிடந்த ஒரு வீட்டுத் திண்ணை மேல் அவனை உட்கார வைத்தவராக அவனைப் பார்க்க, அவன் அவரையே வெறித்துக் கொண்டிருந்தான்.

''என்ன பாக்கறே?''

"நீங்க யார்?''

"நானா... என்ன கேள்வி இது? என் பேர் பீமண்ணா. சமையக்காரன்.''

''உங்களுக்கு சித்து வேலையெல்லாம் ஏதேனும் தெரியுமா என்ன?''

"அப்படின்னா?''

''எனக்குத் தெரிஞ்சா ஏன் உங்களைக் கேக்கறேன்?''

"இப்ப நீதானே என்னைப் பார்த்து சித்து வேலை தெரியுமான்னு கேட்டது?''

"இல்ல... நீங்க சாமர்த்தியமா பேசறேள். பார்க்கத்தான் நீங்க பக்கிரி மாதிரி இருக்கேள். ஆனா பயங்கரமான ஆள்.''

''என்னப்பா என்னென்னமோ சொல்றே! நான் ரொம்ப சாதாரண மனுஷன் பயங்கரமானவன்கறியே. கையில நகம் கூட பெருசா இல்ல.. பாரு.." அவர் கைகளைக் காட்டினார்.

"இல்ல.. உங்ககிட்ட என்னவோ இருக்கு!''

"இப்போதைக்கு மளிகை சாமான்தான் இருக்கு. அதுவும் கோவிலைச் சேர்ந்தது. என்னது கிடையாது."

"இல்ல... இல்ல... உங்ககிட்ட ஒரு பவர் இருக்கு."

''பவரா?''

"ஆமாம்.''

"ஓ.. சமையக்காரன்கிட்ட என்ன பவர் இருக்க முடியும்?"

"பின்ன எப்படி, நீங்க தொட்டா பரவசமா இருக்கே எனக்கு?''

"அப்படியா?"

''எனக்கே எனக்கு மட்டும் தெரிஞ்ச விஷயங்கள் எல்லாம் பேசினீங்களே... எப்படி?''

"அப்படியா?''

"உண்மைய சொல்லுங்கோ. நீங்க யார்?"

"எதிர்லேயே இருக்கேன். ஒரு கோவில் மடப்பள்ளி சமையல்காரன். தெரிஞ்சும் யார்னு கேட்டா என்ன அர்த்தம்?"

"போறும். என்கிட்ட நீங்க தப்ப முடியாது."

"அப்படியா?''

"போறும்... எதுக்கெடுத்தாலும் அப்படியா அப்படியான்னுண்டு. அடிச்சு சொல்றேன் உங்ககிட்ட ஏதோ இருக்கு."

"சரிதான். நான் ஒரு குரங்குல இருந்து உருவான மனுஷக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருத்தன். இன்னொரு குரங்கைக்

கடவுள்னு நினைச்சுண்டு பூஜையும் பண்ணிண்டு இருக்கற முட்டாள். குரங்குதானே... அதுக்கு புத்தி ஏது? என்கிட்ட என்ன பெருசா இருக்க முடியும்?"

அவரது பீடிகையில் மர்மமான உட்பொருள். அவன் அவரை மௌனமாகப் பார்த்தான்.

''எதுவும் கண்ணுக்கு நிதர்சனமா தெரிஞ்சாதான் நீ நம்ப றவன். விஞ்ஞானிகளும் அப்படித்தானே! ஆனா நான் அப்ப டியா? குரங்கை சேவிக்கிற இன்னொரு குரங்கு.''

அவரின் அடுத்தகட்ட பதில், அவனை என்னவோ செய்தது.

''என்ன பாக்கறே..? எல்லாம் நம்ம கைலதான். மனுஷன் நினைச்சா முடியாதது உண்டா? நிலாவுக்கே போய்ட்டு வந்து டலை.. புத்தி இருந்தா போறும்... உலகமே காலடில... அப்படித்தானே?"

"ஸ்வாமி... அவன்தான் அவரை அப்படிக் கூப்பிட்டதும் அவர் திடுக்கிட்டார்.

''யாரு... நானா.. ஸ்வாமியா?'' எதிர் கேள்வி கேட்டார்.

"போறும் விளையாட்டு... எதை சொல்றதா இருந்தாலும் நேரா சொல்லுங்கோ.''

"நான் சொல்ல என்ன இருக்கு. இப்ப எனக்கு அவகாச மில்லை. தா.. இந்த மளிகை சாமானோட போய் வடை தட்டணும். அபிஷேக வேலையல்லாம் இருக்கு. உனக்கு ஒழிஞ்சப்ப வா... பேசுவோம்'' என்றார். சிரித்தபடியே

கையாட்டியவராக மளிகைப் பையையும் எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

பிரமை பிடித்தபடி அன்று கணேசனால் அவரைப் பார்க்கத் தான் முடிந்தது.

# 4

*புத்தியுள்ள மனிதன் திட்டமிட்டு எவ்வளவோ முயற்சிகள் செய்கிறான். ஆனால் எல்லா முயற்சிகளுமா வெற்றியைப் பெற்று விடுகின்றன?*

*விஞ்ஞானக் கருத்துப்படி, அதன் தியரிகளின்படி எந்த ஒரு பொருளும் மாறாத தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். கலக்க வேண்டியதைக் கலந்தால் வரவேண்டியது வந்தே தீரவேண்டும்.*

*அப்படித்தான் சுண்ணாம்பும் மஞ்சளும் நீரோடு கலக்கும்போது செந்நீர் ஆகிறது. எங்கே யார் இதைச் செய்தாலும் செந்நீர்தான் வரும். நெல்லை, உலகம் முழுக்க எங்கே தூவினாலும் அரிசிதான் கிடைக்கும். மாறாது. இடம்மாறி விட்டதால் அது மாறாது. ஆனால், இதை அப்படியே வாழ்க்கையில் பொருத்திப் பார்க்க முடிய வில்லை. ஒருவர் லட்ச ரூபாய் முதல் போட்டு தினம் பன்னிரண்டு மணி நேரம் உழைத்து லட்ச ரூபாய் லாபம் சம்பாதித்ததைக் கேள்விப்பட்டு. இன்னொருவர் அதே போல் செயல்பட்டால், அவர் அதே அளவு லாபம் சம்பாதிக்க முடிவதில்லை. போட்ட முதல், உழைப்பு*

எதிலும் பழுதில்லை. இருந்தாலும் லாபம் வர வில்லை. ஏன்.?

ஒன்றுமே செய்யாமல் ஒருவன் ராஜாவாய் இருக்கிறான். மாடு மாதிரி உழைக்கும் ஒருவன் சேவகனாய்க் கூட இல்லை.

ஏன் இந்த வேறுபாடு. மாறுபாடு..?

விஞ்ஞானக் கருத்து, ஏன் மனித வாழ்வில் அவன் எண்ணங்களில் மட்டும் வெற்றி பெறுவதில்லை.

இந்தக் கேள்விக்குப் பின்னால்தான் 'பிராப்த கர்மா' ஒளிந்துள்ளது. ஒருவருக்குக் கிடைக்கும் நன்மை, தீமை அனைத்துக்கும் பின்னால் இருந்து செயல்படுவது பிராப்த கர்மாதான். ஆனால், அதை உருவாக்குவது, அவன் செயல்தான். ஆம். பிராப்த கர்மாதான். மனித வாழ்வின் மேடுபள்ளங்களுக்குக் காரணம். அதேசமயம் அந்த பிராப்த கர்மா ஒன்றும் இறைவனின் பாரபட்சமான செயல் இல்லை. நம் ஒவ்வொரு செயலின் விளைவாலும்தான் அந்த கர்மா உருவாகிறது.

காஞ்சி முனிவரிடம் ஒரு ஆங்கிலேயர் சில சந்தேகங்களைக் கேள்விகளாய்க் கேட்டார். அன்பே வடிவானவர் கடவுள் என்கிறோம். அவரிடம் எதற்கு இத்தனை ஆயுதங்கள்.

பெரியவர் பட்டென்று பதிலளித்தார்.

"அந்த அன்பைப் பாதுகாக்கத்தான்." அவர் கேட்ட அடுத்த கேள்வி: "எங்கள் மதம் சரண் புகுகின்றவரை மன்னித்து வருகிறது. ஆனால் உங்கள் மதத்தில் சொர்க்கம், நரகம் எல்லாம் இருக்கிறதே. திருந்தினால் மன்னித்து அருள்வதுதானே சிறப்பானது எதற்கு தண்டனையும்

பரிசும்?"

பெரியவர் சிரித்தார். "உங்கள் கடவுள் மன்னிக்கிறவரா?" இது அவர் கேள்வி.

"ஆம் சந்தேகமென்ன..? அதற்கென்று பாவமன்னிப்பு உண்டா? எங்களிடம் உண்டே"

"நல்லது... மன்னிக்கப்பட்டு விட்ட ஒரு சமுதாயத்தில் பிறப்பவர்கள் எப்படி இருக்க வேண்டும்?"

"என்ன கேட்கிறீர்கள்?"

”மன்னிக்கப்பட்டுவிட்ட ஒரு சமுதாயத்தில் குழந்தைகள் பிறக்கின்றனவா?"

"நிச்சயமாக."

”அவை ஒரே அந்தஸ்தில், ஏற்றத்தாழ்வில்லாமல் அழகு, நிறம் இவற்றிலும் பழுதில்லாமல்தான் பிறக்கின்றனவா?" இந்த பதிலைக் கேட்டு, கேட்டவர் திணறினார்.

"உம் சொல்லுங்கள். உங்கள் நாட்டில் பாவமன்னிப்பு கோரிய ஒரு வீட்டில் எந்த ஊனமும் இல்லாமல் நல்ல அழகுடனும், செல்வத்துடனும் தான் குழந்தைகள் பிறக்கின்றனவா?”

"அது எப்படி முடியும்?"

"செய்த தவற்றையே மன்னிக்கும் கடவுள், ஒரு தவறும் செய்ய வாய்ப்பே இல்லாத குழந்தைகளை மட்டும் எப்படி ஏற்றத்தாழ்வுகளுடன் பிறப்பிக்கலாம்?"

"அப்படியானால்..?”

"உங்கள் கடவுள் மன்னிக்கிறார் என்பதை நான் குற்றமாய் சொல்லவில்லை. அவர் கருணை இல்லா

*விட்டால் காற்றுதான் வீசுமா. மழைதான் பொழியுமா..? அது வேறு விஷயம்.*

*"ஆனால் ஒருவருக்கு கிடைக்கும் நன்மை தீமைகளுக்கு கடவுள் பொறுப்பில்லை. அவரவர் பாவ புண்ணியமே காரணம். அதில் சிறியதில்லை- பெரியதில்லை. அவை தான் மனித வாழ்வில் அவனது உயர்வு தாழ்வை நிரூபிக்கின்றன."*

கணேசன் வரையில் அந்த மடப்பள்ளி பிராமணர் பல்லிடுக்குத் தேங்காயாய் சிக்கிக் கொண்டுவிட்டார்.

படுத்தால் அவர் நினைப்புதான்.

எழுந்தாலும் அவர் நினைப்புதான்.

இருந்தும் அவர் வரச் சொன்னார் என்பதற்காக, அவரைப் போய் பார்த்து பேச நினைப்பது தாழ்வாக இருந்தது.

அவன் ஊசலாட்டத்தைக் கவனித்த அவன் அப்பா கூட அவனிடம் கேட்டார்.

"என்ன கணேசா... ஏதோ சிந்தனையாவே இருக்கியே. வேலை கிடைக்கலியேங்கற கவலையா?"

"இல்லப்பா... இது வேற விஷயம்."

"என்னனுதான் சொல்லேன்."

"இந்த ஆஞ்சனேயர் கோவில் பீமண்ணாவைத் தெரியும் தானே உங்களுக்கு."

"பேஷா... அவருக்கு என்ன?"

"அவர் எப்படிப்பட்டவர்?"

"இப்ப எதுக்கு அவரைப்பற்றி..?"

"இல்ல... மனசுல இருக்கறத பட்டுபட்டுன்னு சொல்றார். எப்படின்னு தெரியல."

"உபாசகன் ஆச்சே.அவாளுக்கு இதெல்லாம் சாதாரணம்."

"உபாசகன்னா?"

"ஆஞ்சநேய உபாசகர் அவர். சதா ஆஞ்சநேயர் நினைப்பு தான். எல்லாம் அவர் க்ருபை."

"என்னப்பா உளறல் இது? நீ கூடதான் அவரை சேவிக் கறே... உன்னால முடியலியே."

"நான் சாதாரணமா சேவிக்கிறவன். ஆனா அவர் அப்படி யில்லை. அந்த ஆஞ்சநேயரின் நினைப்பாவே இருக்கறவர்."

"அப்படி இருந்தா..."

"ஆஞ்சநேய உபாசனை என்ன சாதாரண விஷயமா! எவ்வளவோ சித்திகள் அதனால ஏற்படும்னு சொல்வா."

"என்னப்பா நீங்க. ஒருவர் மனசுல என்ன இருக்குன்னு தெரியாததாலதானே ஒவ்வொருத்தரும் தப்பா நடந்துண்டு கஷ்டப்படறோம். குறிப்பா பிசினஸ்ல. மீட்டிங்கல. ஒரு எம்.டி.க்கு எதிர்ல இருக்கறவர் மனசுல இருக்கறது தெரிஞ்சா எவ்வளவு சௌகர்யமா இருக்கும்!"

"அவர் உபாசகரா இருந்தா சாத்யம்தான். ஆனா உபாசகரா ஒருத்தர் ஆன பின்னே எம்.டி., முதலாளி,

ஸ்தானமெல்லாம் சுண்டக்காயாயிடும் கணேசா.''

''வேண்டாம்... பிரதமர் லெவல்ல யோசிங்கோ. நம்ப வாஜ்பாய்க்கு இப்படி ஒரு சக்தி இருந்தா, முஷ்ராஃப் மனசு தெரிஞ்சு முடிவெடுக்கலாமே! எல்லைல குண்டு சப்தம் கேட்காதே!''

"இப்ப உனக்கு என்ன வேணும்? விஷயத்துக்கு வா."

"இல்ல... அவருக்கு எப்படி இது சாத்யம்னு யோசிச்சு யோசிச்சு பாக்கறேன். புரிய மாட்டேங்கறது.''

''புரிஞ்சா சைன்ஸ். புரியலைன்னாதான் மித்.''

"அப்ப இது மித்தா?''

''பின்ன?''

"உண்மையா?''

"மித்துன்னா பொய்னு உனக்கு யார் சொன்னது?"

"இல்ல... வந்து....''

"போய் ஜோலியப்பார். அவர் ரொம்ப நல்ல மனுஷன். துளிசுயநலம் கிடையாது. அவர்கிட்ட போய் தத்து பித்துன்னு எதனா பேசி வைக்காதே. பாக்கத்தான் மனுஷன் பக்கிரி. ஆனால் அவர் மனசுவெச்சா அவர் காலடில கோடிகளை கொட்ட பலர் தயாரா இருக்கா. அவர்தான் அது பெரிசில் லைன்னு கோவில்ல வடை தட்டிண்டிருக்கார்.''

"சுத்தக் கிறுக்கு'' பட்டென்று சொல்லிவிட்டான் கணேசன். சுந்தரமூர்த்தி முறைத்தார்.

"பெரியவாளைப்பத்தி இப்படிச் சொல்லாதே. இது பாவம்.''

"நான் இங்கே சொல்றது அவருக்குக் கேக்கவா போறது.''

"உனக்கு பதில் சொல்ல என்னால முடியாது. மொத்தத்துல சுருக்கமா சொல்றேன். இது பாவம். பாவம் பண்ணாதே. எப்ப பண்ண பாவமோ எண்ணி எண்ணி செலவு பண்ணின்டு வாழ வேண்டிய ஒரு துர்பலனான நிலை. இனியும் பண்ண வேண் டாம்.''

பதிலோடு நகர்ந்து விட்டார். ஆனால், அவனுக்குள் நெருப்பெரிய ஆரம்பித்துவிட்டது.

உபாசகராமே!

உபாசனைக்கு மட்டும் அப்படி என்ன சக்தி? அதற்கு அவ்வளவு சக்தி இருந்தால் பி.ஏ. எதற்கு, பி.ஈ எதற்கு? இந்த கல்வியால் ஆவதுதான் என்ன? பேசாமல் உபாசகராகி அவர் சம்பாதிக்கத் தவறிய கோடிகளை நாம் சம்பாதிக் கலாமே.''

புத்தி இப்படி எல்லாம் சிந்தித்தது. அதற்கு மேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அவரைப் பார்ப்பது என்று கிளம்பி விட்டான்.

நல்லவேளை.

அவரும் ஒய்வில்தான் இருந்தார். கணேசன் வரவும் ஒரு பனை ஓலையை எடுத்துப் போட்டு, "அதன் மேல் உட்காரு'' என்றார்.

உட்கார்ந்தான். உற்றுப் பார்த்தான்.

''என்னப்பா... உன் அப்பா என்னைப் பத்தி பிரமாதமா புகழ்ந்தாராக்கும்?"

முதல் கேள்வியே மனத்தில் அறைந்தது.

"ஆமாம்... எப்படி இப்படி மனசுல நினைக்கறத உங்களால சொல்ல முடியறது?''

"நானா சொல்றேன்..? நீயுல்ல எனக்குள்ள பூந்துண்டு பேசறே..''

"நானா... நான் இங்கன்னா இருக்கேன்?''

"நீன்னா நீயா... எப்பவும் நமக்கு முன்னால ஒரு முனைவு தூரத்துல, நம்ம சூட்சுமசரீரம் ட்ராயிங் பண்ணிண்டு இருக்கும். அது.."

''சூட்சுமத்தை கண்ணுல காட்டுங்களேன் பார்க்கலாம்!''

"இந்த கண்ணுக்கு, அதாவது, இப்ப இருக்கற உன்னோட கண்ணுக்கு அதுக்கான பவர் பத்தாது கண்ணா. ஜெபம் பண்ணு. சதா ராமா ராமான்னு சொல். அவன் கருணை யிருந்தா கூடவே பிராப்தமும் இருந்ததுன்னா நீயும் அதை கண்ணால பாக்கலாம்."

"பிராப்தமா. அப்படின்னா?''

"உன்னோட கர்மவங்கியோட சேமிப்பும் கடனும் தான்.''

''கர்ம வங்கியா?''

"ஆமாம்... ஈ எறும்புக்குக்கூட அது உண்டே."

"அதாவது புண்ணியம் பண்ணு... பாவம் பண்ணா ஆபத்துங்கறேள்."

''கரெக்ட்.''

''என் தெருவுல தண்டபாணின்னு ஒருத்தன். கள்ளச் சாரா யம் விக்கறான். அதுவும் பல வருஷமா. கார் வெச்சுண்டுருக் கான். பத்து வீட்டுக்கு மேல இருக்கு அவனண்ட.''

''என்ன சொல்ற நீ...? அவனை பணக்காரன்கறியா..? சந்தோஷமா இருக்கான்கறியா?''

"இரண்டும்தான்.''

"எதை வெச்சு?''

''கார், பங்களா, வீடு, வாசல் லட்சக்கணக்குல பணம் இருக்கே.''

"இது இருந்துட்டா அவன் சந்தோஷமா இருக்கறதா நினைப்பா உனக்கு?''

"இல்லையா பின்னே?''

"அவன் உடம்புல கிட்னி ஒழுங்கா இருக்கான்னு தெரி யுமா உனக்கு? அவன் ரகசியமா எவ்வளவு மாத்திரை சாப் பிடறான் தெரியுமா உனக்கு?''

"வியாதி ஏழைக்கும் கூடதான் வரது."

"தப்பா சொல்றே... ஏழைக்கும் வரது. ஏழைக்கே வரும் போது பணக்காரன் எந்த மூலை. அப்படி யோசிக்கணும் இந்த விஷயத்தை."

"இதெல்லாம் சமாதானமா படலை எனக்கு. காசும் பண மும் இருந்துட்டா போறும். எல்லாம் காலடில வந்துடும்.அப்ப பாவத்துக்கு கூட ஒரு ரேட் பேசி புண்ணியமாக்கிடலாம்."

"சரி... அந்தக் காசும் பணமும் வரணுமே."

"வரதே. கள்ளச் சாராயத்தாலயம் கடத்தல் சரக்கா லையும்."

"அப்ப இதெல்லாம் பண்ணப் போறியா நீ?"

"பண்ணா தப்பு இல்லையோன்னு நினைச்சுதான் கேக் கறேன்."

"தெளிவா சொல்...நீ பண்ண,உனக்கு தைரியம் இருக்கா?"

"கொஞ்சம் கொஞ்சமா அது வந்துண்டுருக்கு."

"சரிதான்... உன் பிராப்தகர்மா உன்னை அப்படி எல்லாம் யோசிக்க வைக்கறதோ!"

"பிராப்த கர்மான்னா?"

"அதான் சொன்னேனே, உன் அக்கவுண்ட் பேலன்ஸ்."

"புடலங்கா... உலகத்துல அறுநூறு கோடி பேர் இருக்கா. அறுநூறு கோடி பேருக்கு ஒரு நோட்போட்டு அவா செய்யற நல்லது கெட்டதை சூப்பர்வைஸ் பண்ணி கடவுள் அதுக்குத் தகுந்த மாதிரி படியளக்கறார்னா அவர் கடவுள் இல்லை, ஒண்ணா நம்பர் முட்டாள்."

"முட்டாளா?"

"இல்லியா பின்னே? ஏன் படைக்கணும், ஏன் அவனைத்

தப்பும் சரியும் பண்ண விடணும், அப்புறம் ஏன் அதை குறிச்சுக்கணும், அப்புறமா அதுக்குத் தண்டனை தரணும். வெட்டி வேலை. வெட்டி வேலையும் கேடுகெட்ட வெட்டி வேலை.

"பரவாயில்ல... அவர் இருக்கார்னு ஏத்துண்டாவது பேச றியே..."

தப்பு... தப்பு... இவ்வளவு பெரிய உலகத்தை படைச்ச கடவுள் நிச்சயமா இப்படி நடைமுறை சாத்தியமில்லாததை செய்யறவரா இருக்க மாட்டார். ஸோ... உங்க கர்ம வங்கி. பிராப்தம். கடவுள் எல்லாமே ஹம்பக்."

"அவசரப்பட்டு இப்படிச் சொன்னா எப்படி? அவர் இல் லேன்னா அவரை உபாசிக்கிற என்னால எப்படி உன் மனசுல இருக்கறதை உணர முடிஞ்சது."

பீமண்ணா என்கிற அந்த பிராமணர் அவனை சிதற முடி யாதபடி கோத்துக் கட்டினார். ஒரு வினாடி திணறிப் போய் விட்டான் கணேசன்.

"இல்ல.. இல்ல.. உங்க கதை வேற. அது ஏதோ ட்ரிக்."

"சரி... ட்ரிக்காவே இருக்கட்டும். பிராப்தமெல்லாம் பொய் யுங்கறியா?"

"அது எப்படி சாத்யம்.? நான் எப்பவோ செஞ்ச ஒரு தப்பு. எனக்கேகூட அது ஞாபகத்துல இருக்காது. இப்ப கூட வர்ற வழியில என் காலடிப்பட்டு பல எறும்புகள் செத்துப் போயி ருக்கலாம். இதை எல்லாம் கவனிச்சு அதுக்குத் தகுந்தமாதிரி

எனக்கு பலாபலன்களை கடவுள் தர்றார்னா கேனத்தனமா இல்லை?''

"இப்ப உனக்கு, அவர் எப்படி கணக்குப் போட்டு தெரிஞ்சு வெச்சுக்கறார்னு தெரியணும். அவ்வளவு தானே?''

"ஆமாம்... அதுக்கு மட்டும் ஒரு தெளிவான பதிலை நீங்க சொல்லிடுங்க, போறும். நான் பிராப்தத்தை ஒத்துக்கறேன்."

"சரி... நாம கொஞ்ச நாழி வேற விஷயத்தைப் பேசுவோமா?''

''என்ன..?''

"இந்த உலகம் பூரா இப்ப கரண்ட் இருக்கு. இல்லியா?''

"மின்சாரம்தானே. இருக்கு. அதுக்கென்ன இப்போ?''

"அதைக் கொண்டு லைட் எரிக்கறோம். மோட்டார் போட்டுக்கறோம். டி.வி., ஃப்ரிட்ஜ்னு என்னென்னவோ ஆப்பரேட் பண்ணிக்கறோம். ஆனா கரண்ட் ஒண்ணுதான் இல்லியா?''

''ஆமாம்.''

"இப்படி ஒவ்வொருத்தரும் இருபத்திநாலு மணி நேரமும் அதை விரும்பறப்பல்லாம் பயன்படுத்திக்கிறோம். அதேசமயம் எதுக்கு எவ்வளவு செலவாறதுன்னுல்லாம் பாக்கறதில்லை. ஆமாம்தானே.''

அவர் ஏதோ ஒரு நுட்பமான உண்மையைச் சொல்ல வருகிற மாதிரி இருந்தது.

கணேசனும் தலையை அசைத்தான்.

"ஆனாலும் வீட்டுல ஒரு மீட்டர் இருந்து அதுல எவ்வளவு யூனிட் செலவாறதுன்னு பதிவாயிட்றது இல்லியா?''

"ஆமாம்.''

"எங்கையோ உற்பத்தி ஆகற மின்சாரத்தையே ஒரு மனுஷன் எவ்வளவு செலவு பண்றான்னு தெரிஞ்சுக்க வழி வகையைக் கண்டுபிடிச்சுட்டான். அதேபோல் அந்த கடவுள் க்ருபையால, அவனோட மின்சாரம்கற சக்தியால ஆப்பரேட் ஆற, நாம பண்ற நல்லது கெட்டதும் நம்ம மனசாட்சிங்கற மீட்டர்ல பதிவாகி நாம எப்படி செயல்பட்டிருக்கோம்கறது தெரியலாம் இல்லயா?''

அவர் நேராக மனசாட்சியிடம் வந்து நின்றார்.

"அப்ப மனசாட்சிதான் நம்ம நல்லது கெட்டதோட ரெக்கார்ட் நோட் புக்கா?''

"இல்லையா பின்னே! நீ கேட்ட மாதிரி தனித்தனியா அவரா பார்த்து எழுத முடியும்?"

"இதை நான் ஒத்துக்கறேன். ஆனா ஒருத்தர் மனசுக்கு சரின்னு படறது. இன்னொருத்தருக்கு தப்பாப் படலாம். அப்ப அதுலையும் தர்ம நியாயங்கள் குழப்பமாதானே பதிவாகும்?''

"நிச்சயமா.. உன் தர்ம நியாயம் இந்த உலகமே ஒத்துக்கற விதமா இருந்தா அது ஒருவிதம்தான். இவர் மட்டும் ஒத்துக்கற விதமா இருந்தா அது ஒரு விதம்தான்."

"அப்ப கடவுள்."

"மனசாட்சிதான்."

"அப்ப இந்த ஆஞ்சநேயர்!"

"நீ வீட்டுல எரியற விளக்குன்னா. இவர் அந்த விளக்குக் கான மின்சாரத்தையே தர்ற ட்ரான்ஸ்ஃபார்மர். ஆனா உன் கிட்ட, இங்கே இருக்கிறது எல்லாமே ஒரே மின்சாரம்தான். அதான் நாம வேற, கடவுள் வேற இல்லேங்கறோம்."

"இப்ப கொஞ்சம் புரியறது."

"இன்னும்கூடப் புரியும். நாமளே கடவுளா இருந்துண்டு தப்பு பண்ணலாமா? கடவுள்னா கருணாமூர்த்தியில்லையா?"

"அப்ப நாம கடவுள்ங்கற கர்வம் வந்துடுமே."

"அப்படி வந்தா ஃபியூஸ் போயிடும். அதனால என்ன, நல் லதை விட தப்புதான் நிறைய கத்துக் கொடுக்கும். ஞானம் வரணும்னா நிறைய கஷ்டம் வரணும். கஷ்டத்தைப் போன்ற நல்ல நண்பன் கிடையாது. சந்தோஷத்தைப் போன்ற மாய மோகினியும் உலகத்துல கிடையாது."

இப்படி எல்லாம் அன்று அவர் பேசியது கணேசனை அப்படியே மாற்ற ஆரம்பித்துவிட்டது. அதன் பிறகும் எவ்வ ளவோ தர்க்கங்கள். விவாதங்கள். விளக்கங்கள். ஒன்றை மட்டும் அவர் நிதர்சனமாய் புரிய வைத்தார். ஒவ்வொரு மனிதனும் அவன் வாழ்க்கையை அவனது செயல்களாலேயே வடிவமைத்துக் கொள்கிறான் என்பதுதான் அது.

# 5

எவ்வளவு பெரிய பணக்காரர்களாக இருக்கிறோம் என்பதோ, ஏழையாக இருக்கிறோம் என்பதோ விஷயமே இல்லை. அவை எல்லாம் நிலைப்பாடுகள். எப்படிப்பட்ட நிலைப்பாட்டில் இருந்தாலும் மனத்தில் தெளிவிருந்தால் பரம சந்தோஷமாக வாழலாம். அந்த தெளிவுக்கு பக்தி மிக முக்கியம். பணிவு அதைவிட மிக முக்கியம்.

இந்த நிலையில் ஆழ்மனத்தில் எதை நினைத்தாலும், அது காலத்தால் கிடைக்கும். அதற்கேற்ப புத்தி செயல்படும். அந்த செயல்பாட்டு கர்மங்கள், ஆசைப் பட்டதை நமக்கு வாங்கித்தரும்.

கோடீஸ்வரனாக வேண்டுமா?

நிச்சயம் முடியும். இந்த மண்ணில் உள்ளவற்றை அனுபவிக்கவே பிறப்பெடுக்கிறோம். யார் எவ்வளவு அனுபவித்தாலும் எதுவும் கூடப்போவதில்லை. குறையவும் போவதில்லை. எப்பொழுது அனுபவிக்கப் போகிறோம் என்பதில்தான் அவரவர் பிராப்தி உள்ளது.

பிராப்தி சித்தி காலத்தின் வசம் உள்ள ஒன்று. நம் பாவ புண்ணியங்களால் உருவாகும் அதை வேகமாகப் பெறுவதும், உரிய காலத்தில் பெறுவதும் தெளிவானவர் களுக்கு சுலபம்.

அஷ்டமாசித்துவில் ஒன்றான இதை சில சித்த புருஷர்கள் விரைவாகப் பெற, முதலில் தங்கள் கர்ம பலாபலன்களைத் தெரிந்து கொள்வார்கள். பிறகு அதை

*வேகமாய் சமன் செய்வார்கள். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒருவருக்கு அதை பத்து நொடிக்குள் கிடைக்க வைப்பார்கள். பத்து வருட கடனுக்குரிய வட்டியை உடனே செலுத்தி அதைத் தீர்த்துக் கொள்கிற மாதிரியான ஒரு விஷயம்தான் இது.*

*நமது பாவ புண்ணியங்களை எப்படித் தெரிந்து கொள்வது, நமது பிராப்தம் எப்படிப்பட்டது என்பதை எப்படித் தெரிந்து கொள்வது என்கிற கேள்விக்கெல்லாம் விடையும் சுலபம்.*

*ஒருவரது ஜனன ஜாதகம்தான் அவர்களது பாஸ்புக், சரியான கணக்கு போடத் தெரிந்த ஜாதக வித்தகரிடம் காட்டினால், இந்த ஜென்மாவில் நாம் எப்படி இருக்கப் போகிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.*

*பத்து ஆண்டுக்கு சிரமம்தான் என்று ஜாதகத்தில் சொன்னால் அதையும் நமது நற்கருமங்களால், பக்தி சிரத்தையால் மனத்துணிவால் மாற்றலாம். பத்து ஆண்டு சிரமத்தைப் பத்து நொடி வரை சுருக்கலாம். முடியும்.*

*புரிந்து கொள்வதில்தான் எல்லாம் இருக்கிறது. அடுத்து நம்பிக்கை வைப்பதில். அதற்கும் அடுத்து தெளிவாய் சிந்திப்பதில். பின் செயல்படுவதில்தான் எல்லாமே உள்ளது.*

**ஆ**ஞ்சநேயர் கோவில்.

சன்னதியில் கூட்டமில்லை.

கணேசன் வந்து நின்றான். மடப்பள்ளியில் எண்ணெயில் வடை பொறியும் வாசம்.

நேராக அங்கேதான் போய் நின்றான் கணேசன்.

பீமண்ணா ஒரு அழுக்குத் துண்டுடன் வியர்த்து வடிய வடை போட்டுக் கொண்டிருந்தார்.

''வா கணேசா...''

''அண்ணா, உங்களண்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்.''

''சொல்லு.''

''அமெரிக்கால இருந்து மாமா,மாமி, மாமா பொண்ணெல் லாம் வந்துருக்கா.''

''உன் அப்பா கூட சொல்லிண்டிருந்தார்.''

''மாமா என்னை அமெரிக்கா கூப்பிட்றார். அப்படியே...'' முழுவதும் சொல்லாமல் அவரைப் பார்த்தான்.

''என்ன, அவர் பெண்ணை கல்யாணம் பண்ணிக்கோங் கறாரா?'' போட்டு உடைத்தார் பீமண்ணா. அவன், ''எப்படி கண்டு பிடிச்சேள்'' என்றெல்லாம் இப்பொழுது கேட்பதில்லை. அவனுக்குத்தான் அவரது சித்தியும் சக்தியும் புரியாவிட் டாலும் பழகிவிட்ட ஒன்றாயிற்றே.

மௌனமாய் தலையை மட்டும் ஆட்டினான்.

''பண்ணிக்கோ!'' என்றார் வேகமாக.

''அந்தப் பொண்ணுகிட்ட அடக்கமேயில்லை.''

''நீ கூடதான் ஆரம்பத்துல வீறாப்பா பேசினே... இப்ப

மாறிடலையா?''

"அப்ப அவ மாறுவாளா?''

''மாத்து.."

"அவ என்னை மாத்திட்டா?''

''மாத்தினா நீ தலைவன். மாறினா நீ தொண்டன். நீ யார்னு தீர்மானிச்சுக்கோ.''

"இப்படி சொன்னா எப்படி? என்னை கோவில் பிரீஸ்ட்டா மாத்தி அமெரிக்கா கூட்டிண்டு போகப் போறாராம். இப்பகூட நான் சாமியை முழுசா நம்பலை. நம்ப முடியலை."

"அதனால என்ன, நினைக்கற உண்மையை அப்படியே பேசறியே. உண்மைங்கறது ஒளி. ஒளிதான் கடவுள். எப்படிப் பட்ட உண்மையா இருந்தாலும் அங்க கடவுள் இருக்கார்.''

"இப்படி எல்லாம் நீங்க பேசறது புரிஞ்சா மாதிரியும் இருக்கு, புரியாத மாதிரியும் இருக்கு."

"உடனே சில விஷயங்கள் புரியாது, புரியவும் கூடாது. நீ விஷயத்துக்கு வா. இப்ப நான் என்ன பண்ணணும்னு சொல்?''

''பிராப்தம், பிராப்தம்னு சொல்வேள் இல்லையா?''

"ஆமாம்."

"உங்க கால்குலேஷன்படி-அதாகப்பட்டது என் ஜாதகப்படி எனக்கு, என் பிராப்தம் எப்படிப்பட்டதா இருக்கு?''

"அவ்வளவுதானே, இரு... அந்த ஆஞ்சநேயர்கிட்டையே

கேட்டு சொல்றேன்.''

அவர் மளுக்கென்று கண்களை மூடினார். சில நொடி தான். முகம் ஒரு தினுசாக மாறியது.

''கணேசா!''

''அண்ணா..''

''வேண்டாம். இந்தப் பொண்ணு உனக்கு வேண்டாம். இவ பொண்ணு இல்ல..'' பதறத் தொடங்கினார்.

''என்னண்ணா சொல்றேள்?''

''சில விஷயங்கள் கோடுதான் காட்டலாம். புரிஞ்சுக்கோ.''

''அம்மா அப்பா ரொம்ப ஆசைப்படறாளே.''

''ஆனாலும் நீ ஏமாந்துடக்கூடாது பார்... அதனால சொல்றேன்.''

''என்ன சொல்றேள். அவகூட நான் நிம்மதியா வாழ முடியாதா?''

''உன் கல்யாணப்பிராப்தமே,செத்த குழப்பமா இருக்குப்பா.''

''எப்படி?''

''உடைச்சுப் பேச எனக்கு விருப்பமில்லை... விட்றுன்னா விட்று.''

''மீறினா..''

''உன் எண்ணத்துக்கு பலம் இல்லை... பிராப்தத்துக்கு பலம்னு அர்த்தம்.''

அதற்கு மேல் அவரிடம் கேள்விகேட்காமல் திரும்பினான்.

மாமா போர்ட்டபிள் டிவி பார்த்தபடி இருந்தார். அனுஷாவும் மாமியும் தூங்கப் போய்விட்டார்கள். அவன் வரவும், மாமா பார்த்தார். கிறக்கமாய் சிரித்தார். பங்கஜமும் காத்திருந்த மாதிரி ஆரம்பித்தாள்.

''என்னடா கணேசா, இப்படி பண்ணிட்டே... மாமா ஆசையா சொல்லச் சொல்ல இதோ வரேன்னு போய்ட்டியேடா..''

"அப்படிப் போனதும் நல்லதுக்குதாம்மா. நிறைய தெரிஞ்சுண்டேன்.''

''என்னடா சொல்றே?''

"ஒண்ணுமில்ல... விடு அதை."

"சரி உன் பதில் என்ன..? அதைச் சொல். உன் மாமா துடிச்சிண்டிருக்கார்.

"சம்மதம்மா... மனப்பூர்வமான சம்மதம்."

''கணேசா...'' பூரித்தபடி எழுந்தாள் பங்கஜம். ராமச்சந்திரனும் சந்தோஷத்துடன் 'சபாஷ் மாப்ள.' என்றார். ஆனால் அவன் மட்டும் மனத்துக்குள் சொல்லிக் கொண்டான்.

''பாத்துடறேன். நானா அந்த பிராப்தமான்னு, இப்படி துணிவில்லேன்னா அதை புரிஞ்சுக்க முடியாதே''

# 6

*விக்கிரமாதித்தன் காலத்து விஷயம் இது. விக்கிரமாதித்தன் ஒருநாள் காட்டில் போய்க் கொண்டிருந்தான். அவனுக்கு பட்சிபாஷை நன்கு தெரியும். இரண்டு பட்சிகள் ஒரு மரத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தன. அவை இரண்டும் முனிவரிடம் சிஷ்யர்களாக இருந்தவர்கள். ஒரு சாபத்தால் பட்சிகள் ஆகிவிட்டன.*

*எனவே முனிவர்களுக்குண்டான ஞானம் அவற்றின் பேச்சில்.*

*அதில் ஒரு பட்சி கேட்டது: "இன்பம் என்பது எது?"*

*அடுத்த பட்சி சொன்னது: "துன்பம்தான் இன்பம்" என்று.*

*"என்ன உளறுகிறாய்?" என்று முதல் பட்சி திருப்பிக் கேட்டது.*

*"உளறவில்லை. துன்பம்தான் உண்மையான இன்பம். ஒருவன் கடினமாய் உழைத்துவிட்டு ஓய்வெடுப்பது ஒரு துன்பம், உண்மை இன்பமாக மாறுவது போன்றது. அவனே இன்பமாக இருந்து பொழுதைக் கழித்துவிட்டு வறுமையில் வாட நேர்ந்தால் அது பொய்யான இன்பம் உண்மையான துன்பமாய் மாறுவது போன்றது.*

*நம்மையே எடுத்துக்கொள் ஜபதபங்களில் ஈடுபட்டிருந்த நாம், நம் முனிவரின் பேச்சைக் கேளாமல் தவறு செய்து சாபத்தால் இப்படி ஆனோம். அதேசமயம் ஒரு கிளி நம் முனிவரைத் தொழுது மோட்ச கதியே பெற்றது.*

***இதிலிருந்து என்ன தெரிகிறது?" என்று கேட்டது.***

***"உண்மைதான். துன்பம்தான் இன்பமாக வேண்டும். இன்பம் துன்பமாகக் கூடாது. எங்கிருந்து தொடங்கு கிறோம் என்பதில்தான் உள்ளது" என்றது அது***

***அதைக் கேட்டுக் கொண்டிருந்த விக்கிரமாதித்தனும் வியந்து போனான்.***

***வி***ளையாட்டு போல ஆறுமாதங்கள் ஓடி விட்டன கணே சனுக்கு. திருமணமாகி அவன் இப்பொழுது அமெரிக்காவில் மாமாவுடன் இருக்கிறான்.

மாமா சொன்னது மாதிரியே அவனை கோயில் பட்ட ராக்கி, அங்குள்ள கோவிலுக்கு என்று அழைத்துக் கொண்டு போய்விட்டார்.

அப்படியே கம்ப்யூட்டர் பயிற்சி, அது இது என்று அவன் அங்கேயே படிக்கவும் செய்கிறான். அனுஷாவும் அவனுக் கேற்ற மனைவியாக அடக்க ஒடுக்கமாகவே இருக்கிறாள். இல்வாழ்வில் ஒரு குறைவும் இல்லை.

பீமண்ணா சொன்னதும் பயந்ததும் அர்த்தமேயில்லையோ என்றுதான் நினைக்கத் தோன்றியது.

பிராப்தம் என்பதெல்லாம் ரிஷிக் கற்பனை. உண்மையில் மனித வாழ்க்கை சாமர்த்தியங்களால் மட்டுமே அமைவது என்று கணேசனும் நினைத்துக் கொண்டான். கோவிலில் பூஜை செய்யும்போது கூட, அதை ஒரு மெஷின் ஒர்க் போல தான் நினைத்தான். சமயங்களில், இல்லாத சாமியை இப்படி

ஏமாற்றுகிறோமே. இவரே இருந்தால் நான் பொய்யான பட்டர் என்று தெரிந்து என்னை விட்டு வைத்திருப்பாரா என்று கேட்டுக் கொண்டான். ஆனால், கூட்டம் நிறைய வந்தது. வரும்படியும் அதிகம்.

ராமச்சந்திரன் சொன்னமாதிரி அங்கே கோவில் மணி யாட்டிதானே என்று தாழ்வாக நினைக்கவில்லை.

பீமண்ணாவைப் பார்த்தால், 'நீர் சரியான ஃப்ராடு ஓய். உம்ம சக்திகூட ஏதோ ஒரு ட்ரிக்தான் ஸ்வாமி' என்று சொல்லி, அவரை ஒரு உலுக்கு உலுக்க வேண்டும் என்றெல் லாம் நினைத்துக் கொண்டான்.

ஒருநாள் ஒரு அதிசயம்போல பீமண்ணா அவன் இருக்கும் அமெரிக்கா கோவிலுக்கே மடப்பள்ளி பிராமணனாக வந்து சேர்ந்தார். அவனுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரி ஆகிவிட்டது.

''வாங்கோண்ணா... வாங்கோ... கடைசில நீங்களும் என் வழிக்கே வந்துட்டேளா?'' என்று ஆரம்பித்தான்.

அவரோ மௌனமாக அவனைப் பார்த்தார்.

''என்ன முழிப்பு? கஷ்டப்படுவேன், அவ பொம்பளையே கிடையாதுன்னேளே. அமோகமா இருக்கேன் சாமி. அமோ கமா இருக்கேன். ஒரு கொடுமை. எனக்கே நீர் சேவகம் பண்ண, இங்க வந்துட்டேள். இனிமே பிராப்தம், அது இதுன்னு உளறாதேள்'' என்றான். அவர் அதைக் கேட்டுச் சிரித்தார்.

"நீ சந்தோஷமா இருக்கணும் கணேசா. அதுக்காகத் தான் தினம் பெருமாள் பிரார்த்தனை பண்ணிக்கறேன். அது வீண் போகலைங்கறது உன்னை பார்க்கைல நன்னா தெரியறது. அது போறும் எனக்கு'' என்றார் அவர்.

"இந்த டபாய்ப்பெல்லாம் வேண்டாம். நீர் பிரார்த்தனை பண்றதால நான் நன்னா இருக்கேன்னா என்ன அர்த்தம்? உம்ம தியரிப்படி என் நல்லது கெட்டதுதானே என்னை பாதிக் கணும். உங்க பிரார்த்தனை எப்படி எனக்கு பலன் தர முடியும்?"

"உனக்கு நான் தானமா தந்தா, அது உன் கணக்கு தானே?''

"நான் வாங்கிக்கணுமே.''

"நான்கற கர்வம் வாங்கிக்காது. ஆனா உனக்குள்ள இருக்கற என் ஸ்வாமி வாங்கிப்பார். வாங்கிக்கறார். அதான் நீ இப்படி சிரிச்சு பேசிண்டிருக்கே.''

"அப்ப நீர் பிரார்த்தனை பண்ணலைன்னா நான் அவஸ் தைப் படுவேனாக்கும். என்ன பேத்தல் இது? போய் வேலையைப் பாரும். இப்ப சொல்றேன். எனக்காகல்லாம் பிரார்த்தனை பண்ணாதேள், எல்லாம் பொய். புத்திதான் ஓய். கடவுள் ஸ்வாமி எல்லாம். அது இருக்கறவரை மத்ததெல் லாம் சும்மா.'' கையை ஒரு மாதிரி உதறிக்கொண்டு சொல்லி விட்டுச் சென்றான்.

பீமண்ணா கண்கள் கலங்கிவிட்டது.

இந்த தூஷணையை கடவுள் ஏற்றுக்கொண்டு, தூங்கிக் கொண்டு அவனை மன்னிப்பாரா?

பீமண்ணாவிடமும் குழப்பம்.

ஒரு பக்கம் பீமண்ணா சமையல்கட்டு, மடப்பள்ளி என்று கிடந்து அல்லாட.... சன்னதியில், கணேசன், ஸ்வாமியை மற்றவர்களுக்காக பூஜித்தபடி இருக்க, ஒரு வெள்ளைக்காரர் அன்று கோவிலுக்கு வந்திருந்தார். ராமச்சந்திரன்தான் அழைத்து வந்திருந்தார். அவரே கணேசனை அறிமுகப் படுத்தி, 'தமிழ்நாட்டிலேயே பெரிய ஞானி' என்கிற மாதிரி மிகைபடச் சொன்னார். பிறகு எதற்கோ ஒரு நிமிடம் என்று விலகவும், அந்த வெள்ளைக்காரர் கணேசனிடம் பேச்சுக் கொடுத்தார்.

''உங்களுக்கு ரொம்ப பெரிய மனசு சார்'' என்றார். கணேச னுக்குப் புரியவில்லை.

''என்ன பாக்கறீங்க...? எவ்வளவு பெரிய மனசு இருந்திருந் தால் நீங்கள் அனுஷாவை கல்யாணம் செய்து கொண்டிருப் பீர்கள்?'' அவரது அடுத்த கேள்வியும் வியப்பும் கணேசனை நிமிர்த்தியது. அவரை சற்று விதிர்ப்போடு பார்த்தான்.

''உங்களைப் போல ஒவ்வொரு ஆணும் தியாகத்தோடு நடந்து கொண்டால் இந்த நாடும் இந்தியாவாகிவிடும். இந்தி யர்களுக்குதான் டிவைன் ஹார்ட் என்றும் ஸ்லாகித்தார். இதற்குள் ராமச்சந்திரன் ஓடிவந்து, ''லெட் அஸ் மூவ்'' என்று இழுத்துக் கொண்டு நடந்தார்.

கணேசன் மனத்துக்குள் வெள்ளைக்காரர் பேச்சு ஒரு விதைபோல் விழுந்துவிட்டது.

இவர் பாட்டுக்கு தியாகம், அது இது என்கிறாரே. குழம்பிப் போனான்.

வீட்டுக்குப் போன இடத்தில் அனுஷாவிடமும் சொன் னான். அவள் முகம் அதைக் கேட்ட நிமிஷம் வெளிறி விட்டது. இருந்தும் சமாளித்தாள்.

"அந்த டாக்டருக்கென்ன,ஏதாவது உளறிண்டே இருப்பார்'' என்று அவள் சொன்னதில் இருந்துதான் அவர் ஒரு டாக்டர் என்பதே தெரிந்தது.

''உங்கப்பா சொல்லவேயில்லையே?"

"மறந்துருக்கும்..'' சமாளித்தாள் அனுஷா. அப்படியே நழுவி ஓடினாள். கணேசனுக்குள் பூச்சி பறந்தது.

"சம்திங் ராங்..'' உள் மனத்தில் ஒரு குரல் கூவியது. அனுஷாவை கொஞ்சம் கிளறினால் உண்மை தெரிய வருமோ?

ஓடினான். அவளோ, அவள் அம்மா பார்வதியுடன் ஒரு தனி அறையில் குசுகுசுவென்று.

கணேசன் ஷார்ப்பானான். பூனை போல ஒளிந்து கொண்டு காதைக் கொடுத்தான்.

"அம்மா கோவிலுக்கு டாக்டர் பெல் போயிருந்துருக்கார். உன் மாப்பிள்ளையைப் பார்த்து தியாகி அப்படி இப்படின்னு உளறியிருக்கார்.''

"ஐய்யோடா... அப்புறம்?"

"நல்லவேளை, எனக்கு கர்ப்பப்பையே இல்லைங்கற உண்மையை சொல்லலை. ஆக்சிடெண்ட் நடந்தத பத்தியோ அதுல கர்ப்பப்பை அடிபட்டதைப் பத்தியோ சொல்லியிருந்தா கதை கந்தலாகியிருந்திருக்கும்.''

''சரி... சரி.. நீ கூட அதை நினைச்சே பார்க்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கேனோல்லியோ போ... போய் வேலையப் பாரு. அவன் கேட்டா,கோவில் பூசாரி வேலைக்கு வந்ததைத்தான் தியாகம்னு சொன்னார்னு சொல்லி நான் சமாளிக்கறேன்.''

பார்வதி அவளைத் தேற்றும் அதே சமயம், கணேசன் தலை மேல் ஒரு பெரிய இடியே இறங்கியிருந்தது.

***கோ***விலின் ரெஸ்ட் ரூம்.

மெல்ல வந்து கட்டையைக் கிடத்தப்போன பீமண்ணா முன் கண்ணீருடன் போய் நின்றான் கணேசன்.

''என்ன கணேசா... எதுக்கு அழறே?"

"என்னை மன்னிச்சிடுங்கோண்ணா. பிராப்தத்தை ஜெயிக்க ஆசைப்பட்டேன். அதுகிட்ட நான் மாட்டிண்டுட்டேன். என் பொண்டாட்டியும் ஒரு பொண்ணு இல்லைன்னு நீங்க சொன்னதை நான் இன்னிக்குதான் புரிஞ்சுண்டேன். கர்ப்பப்பை இல்லாதவ எப்படி ஒரு முழு பொண்ணாக முடியும்? இப்பதான் புரியறது. என் மாமா கைக்கு அடக்கமானவன்னு என்னை வளைச்சுப் போட்டுட்டார். அவளோட உடம்பு சுகத்

துக்கு பயன்பட என்னை பலியாக்கிட்டார். காலம் பூரா இந்த உண்மையை மறைச்சு வச்சு, கேட்டா என்னையே கூட ஒரு மலடன்னு சொல்லி என்னை எனக்குள்ள கட்டிப் போட்டி ருப்பார். சே... பெரிய புத்திசாலின்னும் புத்திதான் பலம்னும் சொல்லிண்டு எப்படி ஏமாந்துருக்கேன்! இப்பதானே தெரி யறது கர்மபலனோட சக்தி."

கதறி அழுதான்.

பீமண்ணா பதிலுக்குத் தேற்றினார்.

"கவலப்படாதே... நீ அப்பா ஆவே. அந்த ஆஞ்சநேய மூர்த்தி அனுக்ரகம் பண்ணுவார்" என்றார்.

"எப்படி.. எப்படிண்ணா... கர்ப்பப்பையே இல்லாதவ எப்படி கருத்தரிக்க முடியும்?"

"கடவுள் நினைச்சா எதுவும் முடியும். உலகத்துல எவ்வ ளவோ பொருள்கள். கல், மண், புல், பூண்டுன்னு. ஒரு கர்ப்பப்பையைதானா அவன் தரமாட்டான்."

"அது சரி.. நீங்க கேட்டா அவன் தருவான். நான் கேட்டா தருவானா? நான் பாவிண்ணா."

"உணர்ந்துட்டியே... போறாதா, நடக்கும் போ.." அவர் ஆறுதலோடு வழியைக் காட்டினார்.

எப்படி... எப்படி நடக்கும்.? இவர் ஆறுதல் என்கிற பேரில் நடக்க முடியாததை நடக்கும் என்கிறாரோ.

அவனுக்குள் கேள்வி அலை பாய்ந்தது. அவன் அந்த பக்கம் அகன்றிருப்பான். இந்த பக்கமாய் ராமச்சந்திரன்

பீமேண்ணா முன் கைகளைக் கூப்பிக் கொண்டு பரிதாபமாய்ப் பார்த்தார்.

"என்ன ஓய்.. பொண்ணு நன்னா இருக்கணும்னு மருமகன் லைஃப்பை கெடுத்துட்ட கில்டியா."

"ஸ்வாமி.."

"உண்மை தெரிஞ்சுடுத்து... இனி ஓடிப் போயிடுவான்கற பயமா?"

"ஸ்வாமி.."

"கோர்ட்.. விவாகரத்து... அது இதுன்னு அல்லாடப் போற அச்சமா?"

"ஸ்வாமிஈஈ..."

"போம்.. இனி மனசார கூட இந்த மாதிரி நினைக்காதேள். இந்த நிமிஷத்திலேர்ந்து நான் உண்மையா மட்டும் நடந்துப் பேன்னு சங்கல்பம் எடுத்துக்கோ. உங்க தங்கை அன்னிக்கு ஒரு பிராமணர் கல்யாண வீட்டுல நிர்க்கதியா நின்னப்போ, கைகொடுத்து கல்யாணம் பண்ணிண்ட புண்ணியம் இப்போ திரும்ப வந்து உம்ம பொண்ணை தாயாக்கப் போறது. போங்கோ... இனியாவது ஒழுங்கா இருங்கோ."

"எல்லாம் சரி ஸ்வாமி... அவளுக்கு கர்ப்பப்பையே இல்லையே... எப்படி இது சாத்தியம்."

"சாத்யம்தான். நான் பிராப்த சித்தி உடைய சித்தன். ஆனா அதை எந்தக் காரணத்தைக் கொண்டும் பயன் படுத்

தினதில்லை. இப்பப் பயன்படுத்தப் போறேன். சொல்லப் போனா அதுக்காகவே என் ஆஞ்சநேய ஸ்வாமியை அங்க விட்டுட்டு இந்த அமெரிக்காவுக்கு வந்தேன்.. போங்கோ.. வீட்டுக்கு போன நிமிஷம் உங்களுக்கும் கணேசனுக்கும் நான் சொன்னதுக்கான காரணம் தெரியும்.''

பீமண்ணா படுதீர்க்கமாக பேசி கையைக் காட்டினார். ராமச்சந்திரனும் நடுங்கிக் கொண்டே புறப்பட்டார்.

வீட்டுக்குள் நுழையும்போதே பார்வதி பாய்ச்சலுடன் ஓடி வந்தாள்.

"மாப்ள வாங்கோ... கை கொடுங்கோ... நீங்க அப்பா ஆகப்போறேள்."

''என்ன மாமி இது? புது உளறல். என்னை தாஜா பண்றேளா... நான்சென்ஸ்'' அலறினான் கணேசன்.

"இல்ல நான் சொல்றது சத்யம். அனுஷா வாந்தி எடுத்தா, ஒண்ணுமே புரியல. மயங்கியும் விழுந்துர, டாக்டருக்கு போன் பண்ணேன். அவரோ வந்து பார்த்துட்டு எனக்கு கை கொடுத்தார். 'இட் ஈஸ் இம்பாசிபிள்'னு சொன்னேன். உட னேயே ஸ்கேன் பிரிண்ட் எடுத்துப் பார்த்துட்டு 'இட் ஈஸ் பாசிபிள். இட் ஈஸ் ஒண்டர். இட் ஈஸ் மிராகிள்'னு அவரே வாயைப் பொளந்துட்டார்''

"நிஜமாவா?''

"என்மேல சத்யமா...''

''எப்படி..எப்படி." தாளாத மனக்கேள்விகளுடன் ஓடினான்

கணேசன். பின்னாலேயே வந்த ராமச்சந்திரனும் ஆச்சரியத்தில் விழுந்து, இன்ப அதிர்வில் புரண்டு மகளை நெருங்கினார். அதேசமயம் தொலைபேசி அழைப்பு குறுக்கிட்டது. ஓடிப்போய் காதைக் கொடுத்தார். கோயிலில் இருந்து செக்யூரிட்டி பேசினான்.

"சார். மிஸ்டர் பீமண்ணா உக்காந்தநிலைல இறந்துட்டார்."

ராமச்சந்திரனின் கார்ட்லெஸ் ஃபோன் நழுவி சொத்தென்று கீழே விழுந்தது. பார்வதி என்னவென்று கேட்ட படி ஓடிவந்தாள்.

"ஒண்ணுமில்ல பார்வதி. இந்த படுபாவிக்கு ஒரு பேரன் பொறக்கப் போறான். அதேசமயம் ஒரு நல்ல ஆத்மாவை வாழவிடாதபடி பண்ணிட்ட பாவியாயிட்டேன்."

அவர் கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்க ஆரம்பித்தது.

முற்றும்

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in